பக்கங்கள்: 09

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 16 செவ்வாய்க்கிழமை 28.02.2023 கதிர் 111

### இது ரகசியம் அல்ல!

யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆயுள் காலம் அனேகமாக இன்றுடன் முடிவுக்கு வந்துவிடும். புளொட் மற்றும் ஈபிடிபி போன்ற கட்சிகள் மனமிரங்கி ஆனோல்ட்டுக்கு ஆதரவளித்தால்தவிர அவரது ஆட்சிதப்பிப்பிழைப்பதற்கு எந்த ☞2

# 13ஆம் திருத்தத்துக்கு ஜே.வி.பியும் எதிர்ப்பு

## கட்சியின் முக்கியஸ்தர் ஹந்துன்நெத்தி தெரிவிப்பு



அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக எதிர்க்கின்றோம் என்று ஜே.வி.பியின் முக்கியஸ்தர் சுனில் ஹந்துன் நெத்தி தெரிவித்தார்.

சிங்களத் தொலைக்காட்சி நிகழ்ச்சிஒன்றில்பேசும்போதுஅவர் இதனைத் தெரிவித்தார். ☞2

## ராஜபக்ஷ பட்டாளத்தை கூண்டோடு விரட்டுக!

### மக்களிடம் சந்திரிகா வேண்டுகோள்



இனி நடைபெறும் எந்தத் தேர்தலிலும் ராஜபக்ஷ குடும்பத்தினரோ அல்லது அவர்களின் உறவினர்களோ அல்லது அவர்களின் நெருங்கிய நண்பர்களோ வெற்றியடைய இடமளிக்கக்கூடாது. ராஜபக்ஷ பட்டாளத்தை நாட்டு மக்கள் கூண்டோடு ☞2

## மார்ச் முதலாம் திகதி முழு நாடும் முடங்கும்

### தொழிற்சங்கங்கள் அறிவிப்பு

அரசுக்கு எதிராகப் பல்வேறு துறைகளைச் சேர்ந்த 40 தொழிற்சங்கங்கள் மார்ச் முதலாம் திகதி நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளன.

நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் அடக்குமுறை வரிக் கொள்கையை திருத்தக் கோரி நியாயமான கோரிக்கைகளை அரசிடம் ☞2



## நாட்டு மக்களை ஏமாற்றி பிழைப்பு நடத்தமாட்டோம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

நாட்டுமக்களுக்குப்பொய்யான வாக்குறுதிகளை வழங்கி அரசியல் பிழைப்பு நடத்தும் நோக்கம் எமக்கு இல்லை.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் ☞2



## கொழும்பில் நேற்றும் போராட்டம்

இலங்கை மின்சார சபையின் இணைந்த தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு திங்கட்கிழமை பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ☞2

## சஜித் அணியினரை இணைத்துக்கொண்டு விரைவில் புதிய கூட்டணி அமைக்கப்படும்

### ரணிலின் சகா ஹரின் அதிரடி அறிவிப்பு



ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களின் முன்னுரிமையுடன்இரண்டு அல்லது மூன்று வாரங்களில் புதிய ☞2

## இலங்கைக் கடல் பரப்பினுள் இந்திய மீனவர்களை அனுமதிக்கவேகூடாது

### துணைத் தூதரிடம் கடற்றொழிலாளர் சம்மேளனம் வலியுறுத்து

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் வந்து இந்திய மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதிக்கக்கூடாது. இப்போது அத்து மீறி வருபவர்களையும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணத்தில் உள்ள ☞9

### வசந்த முதலிகே உள்ளிட்ட

## 62 பேரும் பிணையில் செல்வதற்கு அனுமதி

கொழும்பு - பத்தரமுல்லையில் உள்ள கல்வி அமைச்சுக்குள் பலவந்தமாக நுழைய முயற்சித்த குற்றச்சாட்டில் கைதான அனைத்துப் ☞2

## ரணிலால் ஒருபோதும் தீர்வு வழங்க முடியாது!

### அடித்துக் கூறுகின்றது ஜே.வி.பி.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் ஒருபோதும் அரசியல் தீர்வை வழங்க முடியாது என்று ஜே.வி.பியின் முக்கியஸ்தர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

தமிழர்களின் வாக்குகளை கொள்ளையடிப்பதற்காக ரணில் நடத்தும் நாடகமே ☞9

## டலஸ் அணி மீது மொட்டு பாய்ச்சல்



டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர ☞9

## போதனா வைத்தியசாலை வாள்வெட்டு: ஒருவர் கைது

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் அத்துமீறி நுழைந்து காவலாளியை வாளால் வெட்ட முயன்றதுடன் அங்கிருந்த பொருட்களைச் ☞9

## தேர்தலுக்கு நிதி வழங்கக் கோரும் மனுவை விசாரிப்பதற்கு தீர்மானம்

உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்களை நடத்துவதற்காக 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை விடுவிக்காமைக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தாக்கல் செய்த மனுவைப் பரிசீலிக்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ☞9

## யாழ்ப்பாண மாநகர சபையில் இன்று 2ஆவது வாக்கெடுப்பு

(லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வர் இ.ஆனோல்ட்டின் இரண்டாவது வரவு செலவுத் திட்டம் இன்று விவாதத்திற்கு வரவுள்ளது.

ஏற்கனவே வரவு செலவுத் திட்டத்தின் முதல் வாக்கெடுப்பின்போது - அது தோற்கடிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் இரண்டாவது வாசிப்புக்காக அது இன்று ☞9

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாய்ப்பும் இல்லை.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் வரவுசெலவுத்திட்டம் இன்று இரண்டாம் தடவை சபையில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. இதன்போது வரவு-செலவுத்திட்டம் தோல்வி அடைந்தால் சபை தானாகவே கலைந்ததாகக் கருதப்படும். மீண்டும் ஒரு வாக்கெடுப்பு நடத்தப்படுவதற்கு வாய்ப்புக்கள் இல்லை.

இந்த வாக்கெடுப்பு நடக்காவிட்டாலும்கூட இன்னும் 15 நாட்களில் சபையின் ஆயுட்காலம் தானாகவே முடிவுக்கு வந்துவிடும்.

இந்த நிலையில் இன்றைய வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்பின்போதும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இரு அணிகளுடன் ஈ.பி.டி.பியும் இணைந்து எதிர்த்தே வாக்களிக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. அதனால் இன்றைய இரண்டாவது வரவு செலவுத்திட்டமும் தோல்வி அடையவே வாய்ப்புக்கள் அதிகம்.

முதல் வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டதில் இருந்து இன்று வரைக்குமான காலத்தில் எந்தப் பேரம் பேசல்களும் படிந்த மாதிரித் தெரியவில்லை. தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் பங்காளியான புளொட்டின் 3 உறுப்பினர்களை வசப்படுத்தும் முயற்சிகளும் கூடவெற்றியளித்ததாகத்தகவலில்லை. எனவே இன்றைய வரவு செலவுத் திட்டமும் தோல்வியடைவது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது.

மாநகர சபையின் மொத்தமுள்ள 45 உறுப்பினர்களில் ஒருவர் இறந்து போய்விட்டதால் இன்றைய வாக்கெடுப்பில் 44 உறுப்பினர்கள் உள்ளனர். இதில் தமிழ் அரசுக் கட்சி வசம் உள்ளவர்கள் வெறும் 9 பேர் மட்டுமே. 10 பேர் இருந்தனர். ஆனால் அவர்களில் ஒருவர் மணிவண்ணன் அணி பக்கம் தாவிவிட்டார் என்பதால் இப்போது அவரது தலையும் குறைந்துவிட்டது. முன்னாள் பங்காளிகளான புளொட் சார்பில் 3 பேரும் ரெலோ சார்பில் 3 பேரும் உள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு 3 ஆசனங்களும் சுதந்திரக் கட்சிக்கு ஒரு ஆசனமும் உள்ளன. ஈபிடிபி அதிருப்திக் குழுவைச் சேர்ந்த ஒருவரும் அந்தக் கட்சியை எதிர்த்துத் துணிந்து ஆனோல்ட்டுக்கு வாக்களிக்கக்கூடியவர். அவரும் கடந்த முறை வாக்களிப்புக்குப் போக முன்னர் மிரட்டப்பட்டதாக ஒரு தகவல் உண்டு. அதனால் இந்தத்தடவை என்ன செய்வார் என்று சொல்ல முடியாது.

எப்படிப் பார்த்தாலும் மணிவண்ணன் அணிக்கு 10 ஆசனங்களும் ஈபிடிபிக்கு 13 ஆசனங்களும் என 23 ஆசனங்கள் உறுதியாக ஆனோல்ட்டுக்கு எதிராக உள்ளன. இதில் மணிவண்ணன் அணியைச் சேர்ந்த ஓர் உறுப்பினர் சபை அமர்வுகளில் பங்கேற்பதற்குத் தடை விதிக்கப்பட்டுவிட்டது. "வைக்கோல் பட்டடை நாய்" என்று தனது உரையின் இடையே விளித்தார் என்பதனால் அவருக்கு ஒரு மாத காலத் தடை விதிக்கப்பட்டது. அதை எதிர்த்து அவர் உள்ளூராட்சி ஆணையாளரிடம் முறையிட்டார். ஆனால் அதில் தான் செய்வதற்கு எதுவும் இல்லை என்று அவர் கை விரித்துவிட்டார். எனவே அந்த உறுப்பினர் இன்றைய கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாது. ஆக மொத்தத்தில் சரியாக 50 சதவீதமான எதிர்ப்பு உறுதியாக உள்ளது.

இதில் முன்னாள் பங்காளிகள் மனது வைத்தால் மட்டுமே ஆனோல்ட் சண்டைக் களத்தில் எதிர்த்து நிற்கும் திராணியையாவது கொண்டிருப்பார். அதற்கும் வாய்ப்பில்லை என்பதால் தோல்வி அனேகமாக உறுதியாகிவிட்டது. இறுதி நேரத்தில் அமைச்சர் மன மிரங்கி ஏதாவது பார்த்துச் செய்தால் தவிர மாநகர சபையின் ஆயுட் காலம் அனேகமாக இன்றுடன் முடிவுக்கு வரும்.

அடுத்தடுத்து இரு முதல்வர்களின் வரவு - செலவுத் திட்டங்கள் தோல்வி அடைந்ததனால் சபை தானாகவே கலைந்ததாக கருதப்படும். ஒருவேளை அப்படிச் சபை கலைந்தால் இன்னும் ஒரு மாதக் கொடுப்பனவு கிடைக்காமல் போய்விடுமே என்று உறுப்பினர்கள் நப்பாசைப்பட்டு ஆனோல்ட்டுக்கு ஆதரவளித்தாலும் இன்றைய வரவு செலவுத் திட்டம் தப்பிப்பிழைக்க வாய்ப்பிருக்கிறது. உறுப்பினர்கள் அந்தளவுக்கு மானங்கெட்டு நடக்கமாட்டார்கள் என்கிறார்கள் அவர்களைப் பற்றி நன்கு தெரிந்தவர்கள்.

- இடிமின்னல் -

## 13ஆம் திருத்தத்துக்கு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண சபை அறிமுகப்படுத்தும் போது அரசமைப்பில் 13 ஆவது திருத்தச் சட்டம் இருந்தது. இப்போது 13 உம் நடைமுறையில் இல்லை; மாகாண சபையும் நடைமுறையில் இல்லை.

தெற்கு மக்கள் ஏற்றுக்கொள்ளாத அரசியல் தீர்வு எங்களுக்கு வேண்டாம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறியுள்ளார். அப்படியென்றால் தெற்கு மக்கள் 13ஐ ஏற்கவில்லை. எமது நிலைப்பாடும் சம்பந்தனின் நிலைப்பாடும் ஒன்று தான்.

அதுமட்டுமல்ல, தமிழர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய - எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வை எமது அரசால் மாத்திரமே முன்வைக்க முடியும். நாம் ஆட்சிக்கு வந்தால் அதைச் செய்வோம். - என்றார்.

முன்னதாக அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப் போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த போது அது பற்றிக் கருத்துத் தெரிவித்திருந்த ஜேவிபி தலைவர் அனுர குமார திஸாநாயக்க, 13ஆவது திருத்தத்தைத் தமது கட்சி ஆதரிக்கும் கட்சி ஆதரிக்கும் என்றார். தமிழ்ப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

"மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டபோது நாட்டில் அமைதியற்ற நிலை ஏற்பட்டது. அக்காலக்கட்டத்தில் சிங்கள அரசியல்வாதிகளுக்கும், தமிழ் தலைமைகளுக்கும் இடையில் பேச்சு நடந்து இணக்கமான சூழலில் மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்படவில்லை. இந்தியாவின் தேவைக்காகவே மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆனால் தற்போது நிலைமை மாற்றமடைந்து விட்டது.தமிழ் மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காகவே மாகாண சபை முறைமை உள்ளது. ஆகவே மாகாண சபை முறைமையை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதை எதிர்க்கப் போவதில்லை" என்று அவர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே இப்போது ஹந்துன் நெத்தி 13ஐ ஜேவிபி முற்றாக எதிர்ப்பதாகத் தெரிவித்திருக்கிறார்.

13ஐ முழுமையாக நடைமுறைப் படுத்தப் போவதாக அறிக்கைவிட்ட ஜனாதிபதி பிக்குகளின் எதிர்ப்பைத் தொடர்ந்து அமைதியாகிவிட்டார்.

13க்கு அப்பாலும் சென்று தீர்வு வழங்குவதை ஆதரிப்பேன் என்று நாடாளுமன்றத்தில் கூறிய மகிந்த ராஜபக்ஷபிக்குகளின்எதிர்ப்பைத்தொடர்ந்து, 13ஐ நான் ஆதரிக்கவில்லை இப் போதைக்கு அதைப் பற்றிப் பேசவேண்டாம் என்கிறார்.

இந்தப் பின்னணியில் பிக்குகளின் எதிர்ப்புக்களைத் தொடர்ந்து ஜேவிபியும் இப்போது தனது கருத்துக்களை மாற்றிக்கொண்டுள்ளது.

## ராஜபக்ஷ ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரட்டியடிக்க வேண்டும்.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

மக்கள் சந்திப்பு ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் சொத்துக்களைச் சூறையாடி சுகபோகம் அனுபவித்த ராஜபக்ஷ பட்டாளம் மீண்டும் அதிகாரத்தைக் கையில் எடுக்கத் துடிக்கின்றது.

பிரதமர் பதவி என்ற கதை எமது காதில் கேட்கின்றது. மக்களால் விரட்டியடிக்கப்பட்ட ராஜபக்ஷக்கள் ஏதோவொரு வழியிலாவது மீண்டும் அதிகாரத்தில் அமரப் படாதபாடு படுகின்றனர். இது வெட்கக்கேடு; அவமானம்.

எந்தத் தேர்தல் நடந்தாலும் ராஜபக்ஷ பட்டாளத்தை நாட்டு மக்கள் கூண்டோடு விரட்டியடிக்கவேண்டும் - என்றார்.

## மார்ச் முதலாம் திகதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்வைத்திருந்தோம். எனினும், எமது கோரிக்கைகளை அரசு நிராகரித்துள்ளது - என்று தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் பரந்தளவிலான தொழில்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 40 தொழிற்சங்கங்களை உள்ளடக்கிய கூட்டமைப்பானது, தங்கள் கோரிக்கைகளை அரசு நிராகரித்தமைக்கு எதிராக எதிர்வரும் புதன்கிழமை நாடளாவிய ரீதியில் அடையாள வேலை நிறுத்தத்தை முன்னெடுக்கவுள்ளது.

## நாட்டு மக்களை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மக்கள் சந்திப்பு ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்குப் பகிர்ந்தளிக்க மட்டுமே தெரியும் என்று குறிப்பிட்ட சிலர் நாடு முழுவதும் கூறிக் கூறித் திரிகின்றனர். சஜித் பிரேமதாஸ நாட்டின் 220 இலட்சம் மக்களுக்காக பகிர்ந்தளிக்கின்றாரே தவிர தனது நண்பர்களுக்கோ அல்லது குடும்பத்தாருக்கோ அல்ல என்பதை அவர்களிடம் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தேர்தல் காலத்தில் பல்வேறு அரசியல் கட்சிகள் பஸ்களில் தங்கள் கட்சியின் பெயரையும் சின்னத்தையும் ஸ்டிக்கர்களாக ஒட்டி தேர்தல் பரப்புரைக்குப் பயன்படுத்திக் கொண்டாலும், 42 இலட்சம் பாடசாலை மாணவர்களுக்கு ஒரு பஸ்ஸையேனும் வழங்க அவர்களால் முடியவில்லை. ஆனாலும், பாடசாலை மாணவர்களுக்கு நான் பஸ் வழங்கும்போது, 'பஸ் மேன்' என்று என்னை அவர்கள் விமர்சிக்கின்றனர்.

எத்தகைய விமர்சனங்களை முன் வைத்தாலும் மக்களுக்கான சேவை நிறுத்தப்படாது - என்றார்.

## சஜித் அணியினரை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டணி அமைக்கப்படும் என்று சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அரசியல்நிகழ்வொன்றில்உரையாற்றிய அவர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவோ அல்லது தானோ ஐக்கிய மக்கள் சக்தியைப் பிளவுபடுத்த விரும்பவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் முதலில் இந்த ஆட்சியுடன் இணைந்தபோது, ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து பல உறுப்பினர்களை அழைத்து வரும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ஆனால், ரணில் விக்கிரமசிங்க வேண்டாம் என்று என்னிடம் கூறினார். எனினும், சமீபத்தில் ஹிக்கடுவையில் அவரைச் சந்தித்தபோது, ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து குறுக்கே செல்ல விரும்பும் உறுப்பினர் களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்குவ தற்கான நேரம் இது என்று அவரிடம் கூறினேன்.

இந்த டிசெம்பர் மாதம் வரை நாட்டில் ஒரு வேலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்தவுள்ளோம். இந்தத் திட்டம் தொடர மக்களின் ஆதரவு தேவை. அதுவரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மக்கள் பலமாக இருக்க வேண்டும் - என்றார்.

## கொழும்பில் நேற்றும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தில் ஈடுபட்டது. மின்சார சபை தலைமையகத்திற்கு முன்பாகக் கூடிய போராட்டக்காரர்கள் அரசுக்கு எதிராகக் குரல் எழுப்பினர். மின் கட்டணங்களை நியாமான அளவில் நிர்ணயிக்கவேண்டும், அரச சொத்துக்களைத் தனியாருக்கு விற்பனை செய்வதற்கு எதிர்ப்பு, நிலவைக் கொடுப்பனவுகளை வழங்கவேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

## 62 பேரும் பிணையில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே உள்ளிட்ட 62 பேர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை இன்று கடுவலை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்திய போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 23ஆம் திகதி பத்தரமுல்லையில் உள்ள கல்வி அமைச்சுக்குள், பலவந்தமாக நுழைய முயற்சித்த (09ஆம் பக்கம் பார்க்க)



காலைக்கதிர் Kalaikkathir

# மாகாணசபை தேர்தலில் போட்டியிடுவீர்களா? கஜேந்திரகுமாரிடம் செல்வம் எம்.பி. கேள்வி!



மாகாணசபை முறைமையை எதிர்க்கும் தமிழ்க் காங்கிரஸ் கட்சி மாகாணசபை தேர்தலில் போட்டியிடுவார்களா? அல்லது எதிர்த்து நிற்பார்களா? என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கேள்விஎழுப்பியுள்ளார்.

வவுனியாவில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

தேர்தல் என்ற ஒன்று இல்லை என்ற ஜனாதிபதியின் கூற்று எந்தளவிற்கு சரியானதாக இருக்கும் என்று சொல்லத்தெரியவில்லை.

ஏனெனில் தேர்தலுக்கான வேட்புமனுக்களை தாக்கல் செய்யும்போது ஐக்கிய தேசியக்கட்சியை சேர்ந்தவர்களும் பல இடங்களில் போட்டியிடுவதற்குத் தீர்மானித்திருந்தார்கள்.

தேர்தல் பிரசாரங்களிலும் ஈடுபட்டார்கள், அப்படியிருக்கும் போது ஜனாதிபதியின் கூற்று வேடிக்கையானதாகவே இருக்கின்றது.

தேர்தலை நடத்துவதில் நிதிப்பிரச்சினை இருக்குமானால் அதனை முன்னமே அறிவித்திருக்க வேண்டும். இன்னும் சொற்ப நாள்களே இருக்கும் போது அவர் இவ்வாறு தெரிவிப்பதில் நியாயம் இருக்குமா என்று தெரியவில்லை.எனவே தேர்தலை நிறுத்துவது ஜனநாயக விரோதமானது என்பதே எனது கருத்து. உண்மையில் மாகாணசபை தேர்தலே முதலில் நடத்தப்பட்டிருக்க வேண்டும்.

தென்னிலங்கை கட்சிகள் அதனை முதன்மையானதாகக் கருதவில்லை. எமது நிலங்களை பாதுகாப்பதற்கான அதிகாரம் 13 ஆவது திருத்ததில் இருக்கின்றது. மாகாணசபை முறைமை கட்டாயம் வேண்டும். அதற்கான தேர்தல் நடத்தப்படவேண்டும்.

அதன் அதிகாரங்கள் அதிகரிக்கப்படவேண்டும். தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வை முன்வைக்கும் போது முதலில் எதிர்ப்பவர்கள் பௌத்த பிக்குகளாகவே இருக்கின்றனர். இது ஓர் அர்த்தமில்லாத செயற்பாடு.

வடக்கு, கிழக்கில் ஒரு நீதியான தீர்வை வழங்க முடியாது என்ற செய்தியை பிக்குகள் தொடர்ச்சியாக வெளிப்படுத்தியுள்ளனர். 13 ஆவது திருத்தம் அமுல்படுத்தப்பட்டாலும் பொலிஸ் அதிகாரம் வழங்கப்படாது என்று ஜனாதிபதி சொல்கிறார். அவரும் பௌத்த பிக்குகளின் சிந்தனையில் செயற்படுபவர்போலத் தெரிகின்றது. எனினும் சிங்கள மக்கள் அதனை எதிர்க்கின்றார்கள் என்று அர்த்தமில்லை.

தமிழ்த்தரப்பிலும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கட்சி அதனை எதிர்க்கின்றது. பௌத்த பிக்குகளுடன் இணைந்து அவர்கள் இதனை எதிர்க்கின்றமை வேடிக்கையானதாக இருக்கின்றது. சமஷ்டியே வேண்டும் என்று அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் அதனைப் பெறுவதற்கான செயற்பாட்டை முன்வைக்கவில்லை. அதனை வென்றெடுப்பதற்கான திட்டம் எதனையும் முன்வைக்கவில்லை.

நான் அவர்களிடம் கேட்கின்றேன் மாகாணசபை முறைமையை எதிர்க்கும் நீங்கள் மாகாணசபை தேர்தல் வந்தால் போட்டியிடுவீர்களா? அல்லது எதிர்த்து நிற்பீர்களா? இந்த கேள்விக்கு பதில் வழங்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுநிற்கின்றேன்.

13 ஆவது திருத்ததின் ஊடாக மாகாணசபை தேர்தல் நடத்தப்பட்டு அதற்கான அதிகாரங்களை வழங்குவதற்கான கடப்பாடு இந்தியாவிற்கு இருக்கின்றது. இது அரசியல் சாசனத்தில் ஓர் அங்கமாக இருக்கிறது. அதனை நடைமுறைப்படுத்துமாறே நாம் கேட்கின்றோம். எனவே, இந்த விடயத்தில் இந்தியா தலையிட வேண்டும். அவர்கள் அதை செய்வார்கள் என்ற நம்பிக்கையில் இருக்கின்றோம். – என்றார்.




காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வாழ்வாதார பிரச்சினையும் இந்திய எதிர்ப்பும் ஒன்றல்ல

கடந்த சில நாட்களாக இந்தியா தொடர்புபட்ட பிரச்சினைகளில் தமிழ் மக்கள் பகுதிகளில் தொடர்ச்சியான எதிர்ப்புக்கள் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. முக்கியமாக இலங்கைக் கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்படுவது தொடர்பான விடயம் மற்றும் மன்னாரில் அதானி நிறுவனம் அமைக்கவுள்ள காற்றாலை மின் உற்பத்தி நிலையம் ஆகிய இரண்டுக்கும் எதிரான எதிர்ப்புக்கள் பதிவு செய்கின்றன.

இந்த இரண்டு பிரச்சினைகள் குறித்தும் போராட்டங்களை நடத்தவும் மக்கள் தயாராக இருக்கின்றார்கள். இந்தத் திட்டங்கள் அடுத்த கட்டத்தை நோக்கி நகருமாக இருந்தால் நிச்சயம் மக்கள் போராட்டங்கள் வெடிக்கும்.

இந்தியா இலங்கைக்கும் தமிழ் மக்களுக்கும் அதிகளவில் உதவிகளைச் செய்கிறபோது அதன் திட்டங்களுக்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கலாமா என்கிற கேள்வி எழுவது நியாயமானதே!

தெற்காசியாவிலேயே இல்லாதளவிற்குச் சிறப்பான தொரு கலாசார நிலையத்தை இந்தியா யாழ்ப்பாணத்தில் அமைத்துத் தந்திருக்கின்றது. இலங்கை பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிக்கொண்ட உடனேயே இந்தியா தானாகவே முன்வந்து உதவிகளை வழங்கியது. இன்னும் ஒருபடி மேலே சென்று, புதுடில்லியையும் தாண்டி தமிழ் நாடு அரசும்கூட உணவுப் பொருட்களைப் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அனுப்பி வைத்தது.

யாழ்ப்பாணத்திலும் மலையகத்திலும் இந்தியா வீட்டுத் திட்டங்களை வழங்கியிருக்கிறது. தொடருந்து அபிவிருத்தி, பலாலி வானூர்தி நிலையத்தைத் தரமுயர்த்துவதற்கான உதவி, காங்கேசன் துறைமுக அபிவிருத்திக்கான உதவி என்று ஏராளம் உதவிகளை இந்தியா வழங்கியிருக்கிறது. இப்படிப் பல உதவிகளையும் செய்யும் இந்தியாவின் திட்டங்களை எதிர்க்கலாமா? என்கிற கேள்வி எழுப்பப்படலாம்.

கடந்த காலத்தில் சம்பூரில் இந்தியாவின் அனல் மின் நிலையம் அமைக்கப்படுவதற்கான விடயத்திலும் தமிழ் மக்கள் மீது இதுபோன்ற விமர்சனங்கள் இந்திய தரப்பினால் வைக்கப்பட்டதுண்டு. ஆனால், இதில் புரிந்துணரப்படவேண்டிய வேறுபாடு ஒன்றுண்டு.

இந்தத் திட்டங்களுக்கான எதிர்ப்பு என்பது தமிழ் மக்கள் தமது வாழ்வாதாரம் சார்ந்து எதிர்கொள்ளும் பிரச்சினைகளினால் காட்டப்படுவதேயன்றி, அரசியல் நோக்கங்களைக் கொண்டதல்ல. இந்திய – இலங்கை ஒப்பந்தம், இந்திய அமைதிப்படையின் கொடூரங்கள் மற்றும் அட்டூழியங்கள், இறுதிப் போரின்போது மனிதப் பேரவலம் நிகழ்த்துவதற்கு இந்தியாவும் உடந்தையாக இருந்தமை, ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை முழுமையாக நசுக்குவதில் இந்தியாவிற்கு இருந்த பங்களிப்பு என்பதை தொடர்பில் தமிழ் மக்களுக்கு கோபமும் அறச்சீற்றமும் இருக்கின்றது என்பது உண்மை.

அதற்காக இந்தத் திட்டங்களை எதிர்ப்பதற்கும் அந்த அறச்சீற்ற அரசியலுக்கும் முடிச்சுப்போடவேண்டிய தேவை ஏதுமில்லை. அந்தக் கோபத்துடன் இந்தப் பிரச்சினைகள் அணுகப்படவில்லை என்பதும் உண்மை. இவை முற்றிலும் மக்களின் வாழ்வாதாரத்துடன் தொடர்புடைய பிரச்சினைகள். இந்தியா ஈழத் தமிழர்களுக்கு வழங்கும் உதவிகள் அனைத்தும் அவர்களின் இருப்பை வடக்கு கிழக்கில் தொடர்ந்தும் பாதுகாக்கும் நோக்கையும் அடிப்படையாகக் கொண்டதுதான். அப்படியிருக்கையில் அந்த இருப்பையே கேள்விக்குள்ளாக்கும் வகையிலான இந்த இரு திட்டங்களும் எதிர்ப்பை எதிர்கொள்வது இயல்பானதே.

அது இந்தியாவுக்கு எதிரான அரசியல் சார்ந்தது அல்ல. எனினும் எதிர்காலத்தில் இந்த விடயங்களை அந்நிய சக்திகள் தமது கைகளுக்கு எடுத்து அரசியலாக்குவதற்கு முன்னர் அவற்றைப் புரிந்துணர்வுடன் தீர்த்து விடுவதே சிறந்தது.

## மஹிந்தவினால்தான் மக்கள் நிம்மதியாக இருக்கின்றனராம்

### ஜோன்ஸ்டன் பெருமிதம்



வசந்த முதலிகே விளக்கமறியலில் வைக்கப்பட்ட போதும் நாடாளுமன்றத்திற்கு தீவைக்க கூறிய லால் காந்தவிடமும், ஹந்துன்நெத்தியிடமும் வாக்குமூலம் பெறப்படவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

இது அநுரவின் டீல், இது எப்படி நடந்தது என முடிந்தால் அநுர பதில் கூறட்டும் எனவும் சவால்விடுத்துள்ளார்.

திஸ்ஸமஹாராம மகளிர் தொகுதி கூட்டத்தில் உரையாற்றிய போது அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

2009 அல்லது 2010 இல் திஸ்ஸமஹாராமவில் நடைபெற்ற பிரதான கூட்டத்தில் உரை நிகழ்த்த வந்தேன். அன்றும் நான் ஜே.வி.பி பற்றிப் பேசினேன்.

இன்று பெருந்தொகையான மக்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கின்றமை மகிழ்ச்சியளிக்கிறது. ஜனநாயகம் பற்றி அநுரவின் கட்சியால் மாத்திரம் தான் பேச முடியுமா? அவ்வாறு நினைத்துத் தான் அவர் செயற்படுகிறார்.

அவர் அவதூறு பேசலாம், பொய் சொல்லலாம், கூட்டங்கள் நடத்தலாம், ஆனால், கூட்டம் நடத்தி, நாம் ஏதாவது சொன்னால், அனைவரும் தம்மைக் குறை சொல்வதாகக் கூறுவார்.

மஹிந்த ராஜபக்ஷ நாட்டைக் காப்பாற்றிய தலைவர் என்பதாலேயே இந்நாட்டு மக்கள் நிம்மதியாக இருக்கிறார்கள். அவரை தெற்கில் இருந்து தான் நாடாளுமன்றத்துக்கு அனுப்பினீர்கள். தெற்கு மக்களுக்கு என்றென்றும் நாம் கடமைப்பட்டுள்ளோம்.

கடந்த 2005 ஆம் ஆண்டில் 180,000 வாக்குகளால் வெற்றி பெற்ற முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த 2010ஆம் ஆண்டில் பல லட்சங்கள் வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். அவர் ஆற்றிய பணியால் நாங்கள் வீதிகளை நிர்மாணித்தோம்.

அவரின் ஆட்சியில் நெடுஞ்சாலைகளை அமைத்தோம். இப்போது மக்கள் விடுதலை முன்னணிக்கு மூன்று நான்கு மணித்தியாலங்களில் கதிர்காமம் செல்லக்கூடிய நெடுஞ்சாலைகளை அமைத்தது அவர் தான்.

காலிமுகத்திடலில் வைத்து அடி, கொல்லு என்று அநுர திஸாநாயக்க கூறினார். பிரதமர் அலுவலகத்தை பிடித்தனர். ஜனாதிபதி மாளிகையை கைப்பற்றினர். பிரதமரின் இல்லத்தை தீயிட்டு நாடாளுமன்ற சந்திக்கு சென்று லால்காந்த என்ன சொன்னார்.

நாடாளுமன்றத்தை சுற்றிவளைக்க சொன்னார். வசந்த முதலிகே விளக்கமறியலில் வைக்கப்பட்டார். ஆனால் சுனில் ஹதுன்னெத்தியோ அல்லது லால்காந்தாவோ பொலிஸில் சென்று வாக்குமூலம் கொடுக்காது தப்பினர்.

இதற்கு அநுர திசாநாயக்க பதில் கொடுப்பாரா?, அநுர உண்மையான டீல்கார். வசந்த முதலிகே மட்டும் சிறைக்கு சென்றார்.

லால்காந்தவும் சுனில் ஹந்துன்நெத்தியும் பொலிஸுக்குக் கூட செல்லவில்லை. முடிந்தால் இதற்கு பதில் சொல்லட்டும் எனத் தெரிவித்துள்ளார்.

## இந்திய மீனவர்களை அனுமதித்தால் மீண்டும் மலேரியா தலைதூக்கும்!

### வடக்கு மீனவர்கள் எச்சரிக்கை

வடக்கு கடற்பரப்பில் இந்திய மீனவர்களை மீன்பிடிக்க அனுமதித்தால் நாட்டில் மீண்டும் மலேரியா தலைதூக்கும் ஆபத்தும் இருக்கின்றது என்று மன்னார் மாவட்ட மீனவர் பிரதிநிதி ஆலம் கருத்து வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில் –

நாம் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் இந்தியத் தரப்புக்களுடன் பலமுறை பேசியுள்ளோம். எமது பசிக்கு உதவும் வகையில் செயற்படும் அதேநேரம் அதனைப் பிடுங்கவும் முற்படுகின்றனர். உதவிக்கு நன்றி கூறும் நாம் அத்துமீறலையும் கண்டிக்கின்றோம்.

இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களுக்கு அனுமதி வழங்கினால் இழப்பு வடக்கு மீனவர்களுக்கே ஏற்படும். இதுவரை ஏற்பட்ட இழப்புக்கே உரிய நிவாரணம் இல்லாதபோது இந்திய மீனவர்களை அனுமதிக்கும் திட்டம் யாருடைய நலனுக்கானது?

இந்திய மீனவர்களை வடக்குக் கடலில் மீன்பிடிக்க அனுமதிப்பதன் ஊடாகப் பெறப்படும் பணம் வடக்குக்குப் பகிர்ந்தளிக்கப்படும் என்று கூறப்படுவதை ஒருபோதும் நம்ப முடியாது. ஏனெனில் இதுவரை எதுவுமே அப்படிப் பகிர்ந்தளிக்கப்படவில்லை. இந்தியாவால் வழங்கப்பட்ட அரிசி மட்டுமே எமக்குக் கிடைத்தது.

இந்த அரசும், அமைச்சரும் தமது பொக்கெற்றை நிரப்புவதற்கே முயற்சிக்கின்றனர். இதனால் இலங்கையின் கடலை மட்டுமல்ல தரையையும் இழக்கும் சூழலே ஏற்படும். தற்போது இலங்கையில் மலேரியா இல்லை. இந்தியாவுக்கு வழங்கும் அனுமதி மூலம் மீண்டும் மலேரியா பரவும். இதேநேரம் இனி வரும் காலத்தில் தமிழக மீனவர்களுடன் பேசி இதற்குத் தீர்வு எட்டவே முடியாது.

கச்சத்தீவில் பேச்சு என்பது கடற்றொழில் அமைச்சரின் மாயாஜாலம் என்றே நம்புகின்றோம். இந்திய மத்திய அரசு அல்லது தமிழக அரசுடன் மட்டுமே இனிப் பேச வேண்டும். அதனால் கச்சத்தீவு பேச்சையும் நாம் முற்று முழுதாக நிராகரிக்கின்றோம். – எனத் தெரிவித்துள்ளார்.

## 40 கோடி டொலர்கள் நாட்டுக்கு வருகிறது சர்வதேச நிறுவனம் ஒன்று வழங்கவுள்ளது

பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கைக்கு 40 கோடி டொலர்களை வழங்கவுள்ளதாக சர்வதேச நிறுவனம் ஒன்று அறிவித்துள்ளது.

உலக வங்கியின் முதலீட்டுப் பிரிவான சர்வதேச நிதியியல் கூட்டுத்தாபனம் இந்த நிதியுதவியை வழங்கவுள்ளதாக நேற்று (திங்கட்கிழமை) அறிவித்துள்ளது.

அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு நிதியளிப்பதற்காக இந்த நிதி வழங்கப்படவுள்ளது.

மருந்து, உணவு மற்றும் உரம் உள்ளிட்ட அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு இந்த நிதி பகிர்ந்தளிக்கப்படும் என்று சர்வதேச நிதியியல் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

# ஐ.தே.க. தலைமையில் பலமான புதிய கூட்டணி!

## ஐக்கிய மக்கள் சக்தியினரும் இணைவர் என்கிறார் ஹரின்



ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையில், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரையும் இணைத்துக் கொண்டு எதிர்வரும் ஓரிரு வாரங்களுக்குள் பலம் மிக்க புதிய கூட்டணியொன்று உருவாகவுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

பதுளையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கடந்த ஆண்டு முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டங்களால் சுற்றுலாப்பயணிகளின் வருகை முற்றாகப் பாதிக்கப்பட்டது. இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு உலக நாடுகளால் தடைகள் விதிக்கப்பட்டன. விமானங்களின் வருகையும் முற்றாக வீழ்ச்சியடைந்தது. எவ்வாறிருப்பினும் இந்த நிலைமையை எத்தனை மாதங்களில் நாம் சரி செய்தோம்?

ஜனவரியில் ஒரு லட்சம் சுற்றுலாப்பயணிகள் வருகை தந்துள்ளனர். பெப்ரவரியில் வருகை தந்த சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை ஒரு லட்சத்தைக் கடந்துள்ளது. டிசெம்பராகும் போது அதிகளவிலான சுற்றுலாப்பயணிகள் வருகை தந்த மாதமாக அதனை பதிவு செய்ய முடியும் என்று சவால் விடுக்கின்றோம்.

எமிரேட்ஸ், கட்டார், இந்தியா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகளிலிருந்து வருகை தரும் விமானங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஏப்ரலின் பின்னர் சீனாவிலிருந்து பெருந்தொகை சுற்றுலாப்பயணிகள் வருகை தரவுள்ளனர். சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவிக்கு நிகராக வருமானத்தை சீன சுற்றுலாப்பயணிகளின் வருகையால் பெற்றுக் கொள்ள முடியும்.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு இவ்வாறு சிறந்த வேலைத்திட்டங்களை நாம் தயாரித்திருக்கின்றோம். எனவே எமக்கு டிசெம்பர் வரை அவற்றை முன்னெடுத்துச் செல்வதற்கு வாய்ப்பளியுங்கள். அதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்குங்கள். நாம் அனைவரும் ஜனாதிபதிக்கு பலத்தை வழங்குவோம்.

எதிர்வரும் ஓரிரு வாரங்களுக்குள் ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையில் , ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் புதிய பலம் மிக்க கூட்டணியொன்று உருவாகவுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியை பிளவுபடுத்த வேண்டும் என்ற எந்தவொரு தேவையும் எனக்கோ , ஜனாதிபதிக்கோ கிடையாது. நான் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து விலகிய போதும் என்னுடன் வரவிருந்தவர்களை இப்போதே அழைத்து வர வேண்டாம் என்று ஜனாதிபதி கூறினார்.

எவ்வாறிருப்பினும் இனியும் தாமதிக்கத் தேவையில்லை என்றும், வர விருப்பவர்களை எம்முடன் இணைத்துக் கொள்வோம் என்றும் நான் ஜனாதிபதியிடம் தெரிவித்திருக்கின்றேன்.– என்றார்.




## சிறுவர் துஷ்பிரயோக குற்றச்சாட்டில் கம்பளையில் நபருக்கு விளக்கமறியல்

11 வயது சிறுமியை அச்சுறுத்தி பல்வேறு சந்தர்ப்பங்களில் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தியதாக கூறப்படும் 44 வயது நபரை எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கம்பளை மாவட்ட நீதி மன்ற நீதிவான் நாமல் பெரேரா உத்தரவிட்டார்.

இதன் போது கம்பளை ஹெட்காலை சாக் கம்மான கிராமத்தைச் சேர்ந்த குடும்பஸ்தரான நபரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் சிறுமியின் தாயின் பிறந்த நாள் கொண்டாடுவதற்காக பொருள்கள் வாங்க சிறுமி கடைக்கு போய் வந்த சந்தர்ப்பத்திலேயே சந்தேக நபர் சிறுமியை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார். அதன்பின் பல்வேறு சந்தர்ப்பங்களில் தொடர்ந்து அச்சுறுத்தி துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் எனப் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் குறித்த சிறுமி பாடசாலையில் சோர்ந்து காணப்பட்டதையடுத்து வகுப்பு ஆசிரியை வினவிய பொழுதே இந்த விடயம் தெரிய வந்துள்ளது. இதையடுத்து சிறுமியின் தாய் வரவழைக்கப்பட்டு சிறுவர் பாதுகாப்பு பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பின்னர் வெள்ளிக்கிழமை கம்பளை ஹெட்காலை பொலிஸாரினால் சந்தேக நபர் கைது செய்யப்பட்டு நீதி மன்றில் நிறுத்திய பொழுதே மேற்கண்ட உத்தரவை நீதிவான் பிறப்பித்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# சிங்களவர்களிடம் இருந்து இந்தியா எமக்கு எதனையும் பெற்றுத் தராது!

## காணாமலாக்கப்பட்டோர் சங்க செயலர் ராஜ்குமார் கருத்து



சிங்களவர்களிடம் இருந்து இந்தியா தமிழர்களுக்கு எதனையும் பெற்றுத் தராது என காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்க செயலாளர் கோ.ராஜ்குமார் தெரிவித்தார்.

வவுனியாவில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கம் போராட்டம் ஆரம்பித்து 2 ஆயிரத்து 200 ஆவது நாளான நேற்று (திங்கட்கிழமை) வவுனியா பிரதான தபாலகத்துக்கு அருகில் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார், தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் -

இறையாண்மைக்காகவும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவிகளைப் பெறுவதற்கான எமது தொடர்ச்சியான போராட்டம் தொடர்கிறது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் வடக்கு - கிழக்கு இணைப்பு, குருந்தூர் மலை, உள்நாட்டு போர்க்குற்ற விசாரணை அனைத்தும் இலங்கையின் நீதித்துறை தமிழர்களுக்கு எதிரானது என்பதை சுட்டிக் காட்டுகின்றன. ஒருவேளை இந்த இலங்கையின் நீதித்துறை சிங்களவர்களுக்குப் பயன்படலாம்.

வடக்கு, கிழக்கில் தமிழ் நீதியரசர்களின் தீர்மானம் எதுவாக இருந்தாலும், அரசாங்கமோ, கொழும்பில் உள்ள உயர் நீதிமன்றங்களோ, உச்ச நீதிமன்றமோ அதனை மதிக்காது நிராகரித்துவிடும். 1983 சிங்களப் படுகொலைக்குப் பின்னர், 1984 இல் அமெரிக்கா பின்வரும் மதிப்பீட்டைச் செய்தது:

'தமிழ் கோரிக்கைகள் அநேகமாக ஒரு கூட்டாட்சி கட்டமைப்பின் மூலம் திருப்தி அடையும், அது தமிழர்கள் பெரும்பான்மையான மக்களை உள்ளடக்கிய பாதுகாப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சியின் மீதான கட்டுப்பாட்டை உத்தரவாதம் செய்யும்' என்கிறது.

'பொருளாதார மற்றும் பாதுகாப்புக் கட்டுப்பாட்டுடன் கூடிய ஒரு தன்னாட்சி தாயகம் வேண்டும் என்பதில் தமிழர்கள் உறுதியாக உள்ளனர்' என்று வாஷிங்டன் நம்புவதாக அந்த ஆவணம் கருத்து தெரிவித்துள்ளது.

2009 ஆம் ஆண்டு தமிழினப் படுகொலை மற்றும் இனப்படுகொலைக்குப் பிறகு, அமெரிக்கக் கருத்து, கொன் பெட்ரலிசம் அல்லது முழுத் தமிழ் இறையாண்மைக்கு மேலும் சென்றிருக்கும் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம்.

எனவே தமிழர் இறையாண்மையை மீட்டெடுக்க அமெரிக்காவின் உதவியை தமிழர்களாகிய நாம் அனைவரும் கோரவேண்டும்.

சிங்களவர்களிடம் இருந்து இந்தியா தமிழர்களுக்கு எதனையும் பெற்றுத் தரும் என்று நம்ப வேண்டாம். அவர்கள் தமிழர்களுக்காக எதையும் செய்ய மாட்டார்கள்.

ரஷ்யாவின் புட்டின் மற்றும் அவரது தளபதிகளால் உக்ரைன்கள் மீதான கொடூரமான கொலைகளைக் கண்டிக்காமல் ஐ.நா. வாக்கெடுப்பில் நடுநிலை வகித்ததால் இந்தியா தனது மனித உரிமை அந்தஸ்தை இழந்தது. ஐ.நாவின் வாக்கெடுப்புக்குப் பிறகு இந்தியா உலகளவில் தனது செல்வாக்கை இழந்தது.

நமது இறையாண்மையை மீட்டெடுக்க அமெரிக்காவின் உதவிக்காக பிரார்த்தனை செய்வோம். - எனத் தெரிவித்தார்.

# ஷாப்டரின் மரணத்தைக் கண்டறிய ஐந்து பேர் கொண்ட குழு நியமனம்

கோடீஸ்வர வர்த்தகரான தினேஷ் ஷாப்டரின் மரணம் தற்கொலையா அல்லது கொலையா என்பதைக் கண்டறிவதற்காக, தடயவியல் நிபுணர்கள் மற்றும் விசேட சட்ட வைத்திய அதிகாரிகள் அடங்கிய 5 பேர் கொண்ட குழாம் ஒன்று இன்று கொழும்பு மேலதிக நீதிவான் ராஜீந்திர ஜயசூரியவினால் நியமிக்கப்பட்டது.

தடயவியல் மருத்துவம் தொடர்பான நிபுணர் பேராசிரியர் அசேல மெண்டிஸ் தலைமையிலான மூன்று பேராசிரியர்கள் மற்றும் சட்ட வைத்திய அதிகாரி வி.ஆர். ருவன்புர தலைமையிலான சட்ட வைத்திய நிபுணர்கள் இந்தக் குழாமில் உள்ளடங்குகின்றனர்.

குற்றவியல் சட்டத்தின் 373 ஆவது பிரிவின் கீழ் நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் நியமிக்கப்பட்ட மேற்படி குழுவிடம் இந்த மரணம் தொடர்பாக நீதிமன்றிடம் உள்ள அனைத்து அறிக்கைகளையும் ஒப்படைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தின் பிரதான பதிவாளருக்கு மேலதிக நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி, தினேஷ் ஷாப்டரின் பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் மரணித்தவர் தொடர்பில் மனநல நிபுணர் நீல் பெர்னாண்டோ நீதிமன்றில் சமர்ப்பித்த தடயவியல் பிரேத பரிசோதனை அறிக்கை உள்ளிட்ட அனைத்து ஆவணங்களையும் கையளிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.



அதன்படி, இந்த வழக்கு எதிர்வரும் மார்ச் 14ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

# பாதுகாப்பற்ற கிணற்றில் வீழ்ந்த முதியவர் சாவு

கரவெட்டி, கப்பூது பகுதியில் உள்ள பாதுகாப்பற்ற தோட்டக் கிணற்றில் திங்கட்கிழமை வீழ்ந்த வயோதிபர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் அதே பகுதியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை பொன்னையாபிள்ளை (வயது – 65) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், நெல்லியடி பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட இந்தப் பகுதியில் உள்ள வயல் கிணற்றில் சடலம் ஒன்று மிதப்பதாகப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு வந்த அவர்கள் சடலத்தை மீட்டு விசாரணைகளை முன்னெடுத்தனர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற கரவெட்டி திடீர் இறப்பு விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் விசாரணை நடத்தி, சடலத்தை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் உடற்கூறாய்வு செய்ய உத்தரவிட்டார்.

கரவெட்டி பகுதியில் பாதுகாப்பற்ற கிணறுகள் பல காணப்படுவதாகவும் அவற்றை காணி உரிமையாளர்கள் பாதுகாப்பு வேலி அமைத்து பாதுகாப்பானதாக்க வேண்டும் எனவும் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி தெரிவித்தார்.

# சிறுதானியச் செய்கை தொடர்பான கூட்டம் எழுதுமட்டுவாழில் இன்று

தென்மராட்சி, பெப். 28

எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்பிற்குட்பட்ட ஒட்டுவெளி வயல்வெளியில் காலபோக நெற்செய்கைக்குப் பின்னரான சிறுதானிய செய்கையில் ஈடுபடவுள்ளவர்களுக்கான கூட்டம் இன்று காலை 10 மணிக்கு ஸ்ரீ கணேசா சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஒட்டுவெளி வயலில் சிறுதானியச் செய்கையில் ஈடுபட இதுவரை 40 பேர் விண்ணப்பித்துள்ளனர். செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி கமநலசேவை நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் அது தொடர்பான கூட்டத்தில் சிறுதானிய செய்கை மேற்கொள்ளவுள்ள சகலரும் கலந்துகொள்ள வேண்டும் – கால்நடை வளர்ப்பவர்களும் பங்குபற்ற வேண்டும்.

அத்துடன் கூட்டத்திற்கு வருகை தரும் விவசாயிகள் 2023ஆம் ஆண்டிற்கான சந்தா பணத்தினையும் செலுத்த முடியும்.என கமக்கார அமைப்பின் செயலாளர் இ.தெய்வேந்திரம்பிள்ளை தெரிவித்தார்.

# கொலையுண்ட வர்த்தகரின் மனைவியை பிடிக்க பிரேஸிலின் உதவி நாடும் சிஐடி!



ஓபெக்ஸ் ஹோல்டிங்ஸ் அதிபரும் கோடீஸ்வர வர்த்தகருமான ஒனேஷ் சுபசிங்கவின் மனைவி மற்றும் உதவியாளரைக் கைதுசெய்ய சர்வதேச பொலிஸாரின் ஊடாக பிரேஸில் பொலிஸாரின் உதவியை குற்றப்புலனாய்வுதிணைக்களம் கோரியுள்ளது.

இது தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் உயர் அதிகாரி தெரிவிக்கையில் –

இந்தோனேஷியாவின் ஜகார்த்தா பொலிஸாரிடமும் பிரேஸில் பொலிஸாரிடமும் இவ்வாறான கோரிக்கையை முன்வைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஒனேஷ் சுபசிங்கவின் பிரேஸில் மனைவியும் அவரது உதவியாளரும் தற்போது பிரேஸிலில் இருப்பதாக உறுதிப்படுத்தக்கூடிய தகவல்கள் கிடைத்துள்ளதால், பிரேஸில் பொலிஸாரிடம் இரகசியப் பொலிஸார் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர் என அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பொலிஸ் மா அதிபர் விக்ரமரத்னவின் அறிவுறுத்தலின்பேரில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர்

ஆரம்பித்த விசாரணையில், ஒனேஷ் சுபசிங்கவின் சகோதரரான சுபாஷ் சுபசிங்க மற்றும் ஒனேஷின் வீட்டில் பணிப்பெண்களாகப் பணிபுரியும் ஐந்து பெண்களிடம் அதிகாரிகள் இதுவரை வாக்குமூலம் பெற்றுள்ளனர்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# காரைதீவில் ஞாயிறு டெங்கு சோதனை





(நூருல் ஹுதா உமர்)

தேசிய டெங்கு தடுப்பு பிரிவின் தேசிய நுளம்பு ஒழிப்பு நிகழ்ச்சிக்கு அமைவாக டெங்கு பரிசோதனை நிகழ்ச்சியும், நுளம்பு ஒழிப்பு முறை பற்றிய பொதுமக்களுக்கு விழிப்பூட்டலும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் அவர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் ஞாயிறு காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரதேசத்தில் இடம்பெற்றது.

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் தஸ்லிமா வஸீரின் தலைமையில், காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் பைசால் முஸ்தபாவின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை நிர்வாகத்திற்குட்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்களின் மற்பார்வை பொது சுகாதார பரிசோதகர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள், டெங்கு களத்தடுப்பு உதவியாளர்கள், சுகாதார ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய நிர்வாக பிரதேசங்களில் இடம்பெற்ற கள ஆய்வின்போது டெங்கு பரவும் இடங்கள் அழிக்கப்பட்டதுடன், காணி உரிமையாளர்களுக்கு ஆலோசனைகளும், சிலருக்கு எச்சரிக்கைகளும் விடுக்கப்பட்டது. "மழைக் காலம் தொடங்க உள்ளதனால் நுளம்பு பெருகுவதனை குறைக்கவும், எங்கள் பகுதியில் டெங்கு பரவுவதைத் தடுக்கவும், தினமும் காலை குறைந்தது 10 நிமிடங்கள் உங்கள் சுற்றுச்சூழலைக் கவனித்து நுளம்பு பெருகும் இடங்களை அகற்றி டெங்கு நோயிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும்.

பொதுமக்களாகிய அனைவரும் எமது பிரதேசத்திலிருந்து டெங்கை ஒழிக்க உதவ வேண்டும். தனியே சுகாதாரத் துறையினரால் மாத்திரம் இந் நோயைக் கட்டுப்படுத்த முடியாது என்பதை சகலரும் அறியவேண்டும். பொதுமக்கள் தமது வீடு வளவுகளில் தினமும் நீர் தேங்கி நிற்கக்கூடிய பொருட்கள் மற்றும் இடங்களை அகற்றுங்கள் அல்லது நீர் தேங்கி நிற்காதவாறு கவனியுங்கள்" என்றார் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் தஸ்லிமா வஸீர்.

## ஐஸ் போதையுடன் கல்முனையில் ஒருவர் கைது



(பாரூக் ஷிகான்)

ஐஸ்போதைப்பொருளை விற்பனை செய்தார் என்று கூறப்படும் நபரைக் கல்முனை சிறப்பு அதிரடிப்படையினர் கைது செய்தனர்.

அம்பாறை மாவட்டம் பெரியநீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாண்டிருப்பு பகுதியில் அமைந்துள்ள வாகன புகை பரிசோதனை நிலையத்திற்கு முன்னால் சந்தேகத்திற்கிடமாக நடமாடிய இளைஞனைக் கைது செய்த அதிரடிப்படையினர் அவரிடம் சோதனை நடத்தியபோது ஐஸ்போதைப்பொருளைக் கைப்பற்றினர்.

கைதுசெய்யப்பட்ட இளைஞர் பெரிய நீலாவணைப் பகுதியைச் சேர்ந்தவர். அவரிடமிருந்து 1.8 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாக அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

கைதான சந்தேக நபர் பாடசாலை மாணவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்டவர்களுக்கு நீண்டகாலமாக ஐஸ்விற்றுவந்தவர் என்றும் தொலைபேசியின் ஊடாக தொடர்பு கொண்டு இந்த வியாபாரத்தில் அவர் ஈடுபட்டுவந்தனை விசாரணைகளில் தெரியவந்தது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். சந்தேகநபரும் சான்றுபொருட்களும் பெரிய நீலாவணை பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டன.

## நாம் தலை குனிந்து கற்றால் தலை நிமிர்ந்து வாழலாம்

### பாராட்டு விழாவில் கல்விப்பணிப்பாளர் உமர் மௌலானா உரை

(காரைதீவு சகா)

நாம் தலை குனிந்து கற்றால் எதிர்காலத்தில் தலை நிமிர்ந்து வாழலாம். இதனை மாணவர்கள் மனதில் நிலை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு சொறிக்கல்முனை ஹொலிகுறோஸ் மகா வித்தியாலய சாதனையாளர் பாராட்டு விழாவில் உரையாற்றிய சம்மாந்துறைவலயக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி செய்யட் உமர் மௌலானா தெரிவித்தார்.

இந்த விழா அதிபர் அருட்சகோதரி எம்.சிறிய புஷ்பம் தலைமையில் கடந்த வியாழக்கிழமை சிறப்பாக இடம் பெற்றது. மதிப்புறு அதிதிகளாக அருட்தந்தை ஜெயகாந்தன், நாவிதன்வெளி கோட்டக்கல்வி பணிப்பாளர் பி. பரமதயாளன், உதவிக் கல்விப் பணிப்பாளர் வீ.ரி.சகாதேவராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

அங்கு சம்மாந்துறை வலயத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய (175) புள்ளிகளைப் பெற்று வலயத்திலே முதல்நிலை சாதனை படைத்த மாணவன் சுதாகரன் சிரோன் வெற்றிக் கிண்ணம் வழங்கி பாராட்டப்பட்டார். அவருக்குக் கற்பித்த ஆசிரியர் எஸ்.லோகேஸ்வரனுக்கு பாடசாலைச் சமுகம் ஆளுயர மாலைகள் சூட்டி பொன்னாடை போர்த்தி கௌரவித்தது.



அங்கு பணிப்பாளர் உமர் மௌலானா தனது உரையில் தெரிவித்ததாவது –

இந்தப் பாடசாலையில் ஒழுக்கம் பிரதானமாக ஓம்பப்படுகின்றது என்று நண்பர் சகா சொன்னார். உண்மை தான் அதன் காரணமாகவே வலையத்தில் 175 புள்ளிகளைப்பெற்று முதலிடம் பெற்ற மாணவன் ஷெரோன் இந்த பாடசாலையில் இருக்கின்றார். 2020 ஆம் ஆண்டிலும் இதே பாடசாலையைச் சேர்ந்த ஷான் ஜொகிர்தன் 191 புள்ளிகளைப் பெற்று சாதனை நிலை நாட்டியதாக அதிபர் அருட்சகோதரி ஆ. சிறியபுஷ்பம் தெரிவித்தார்.

இவருக்கு கற்பித்த ஆசிரியர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். குறிப்பாக தரம் 5 இல் கற்பித்த யோகேஸ்வரன் ஆசிரியர் ஒரு தியாகி எனலாம். மாணவர்களை வீட்டுக்கு அழைத்து 5 சதம் வாங்காமல் அவர்களை படிப்பித்திருக்கிறார். இவை எல்லாம் ஏனைய ஆசிரியர்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கின்றது.

நாலடியாரில் கல்வி கரையிலே கற்போர் நாள் சில என்று குறிப்பிடப்படுகிறது. எனவே இருக்கின்ற காலத்திலேயே நாங்கள் படிக்க வேண்டும் .நாங்கள் எல்லாம் அன்று பாயிலே குப்புறப்படுத்து படித்தோம். ஆனால் இன்று பல வசதிகள் இருக்கின்றன. இருந்தாலும் இங்கு பல வசதியீனங்களுக்கு மத்தியிலே இவ்வாறான சாதனையை நிலைநாட்டப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது – என்றார்.

## போதைக் குளிசைகளுடன் சந்தேகநபர் ஞாயிறு கைது

(பாரூக் ஷிகான்)

பாதணி விற்பனை நிலையம் ஒன்றில் பணியாற்றி தொலைபேசி ஊடாக சூட்சுமமாக போதையூட்டும் குளிசைகளை விற்பனை செய்தார் என்றகுற்றச்சாட்டில் கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை நகரப்பகுதியில் பிரபல பாதணிகள் விற்பனை செய்கின்றகடையில் பணியாற்றும் இவர் போதைப்பொருள் குளிசைகளை விநியோகித்து வருகிறார் என்று கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டார் என்று அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் மட்டக்களப்பு காத்தான்குடி பகுதியைச் சேர்ந்தவர். 28 வயதான இவரைக் கைது செய்தபோது அவரிடம் 100 போதைக் குளிசைகள் இருந்தன என்றும் அவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்றும் அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

கைதான சந்தேக நபர் பாடசாலை மாணவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்டவர்களுக்கு நீண்டகால மாக போதைக் குளிசைகளை விநியோகித்து வந்தவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கைதான பின்னரும் சந்தேகநபரின் அலைபேசிக்கு போதைக்குளிசைகள் கேட்டு பல அழைப்புக்கள் வந்தவண்ணம் இருக்கின்றன என்று அதிரடிப்படையினர் தெரிவித்தனர். சந்தேகநபர் சான்று பொருட்களுடன் கல்முனை தலைமையக பொலிஸாரிடம் நீதிமன்ற நடவடிக்கைக்காக ஒப்படைக்கப்பட்டார்.



## கிழக்கில் விழிப்புணர்வு நாடகம்

(ஹஸ்பர்)

திருகோணமலை, பெப்.28

திருகோணமலை மாவட்ட செயலகம், கிழக்கு மாகாண கல்வி அமைச்சு மற்றும் சர்வதேச புலம்பெயர் அமைப்பு ஆகிய இணைந்து சரியான பாதையில் வெளிநாட்டுக்கு செல்லல் என்ற தலைப்பில் கருத்தாடலுடன் கூடிய நாடகத்தினை மாவட்டத்தினுடைய தெரிவு செய்யப்பட்ட இடங்களில் அரங்கேற்ற உள்ளன.

சரியானபாதையில்வெளிநாட்டுக்கு செல்ல வேண்டியதன் அவசியம், சரியான பாதையில் வெளிநாடு செல்லாமை காரணமாக ஏற்படக் கூடிய சமூக ரீதியான, சட்டரீதியான பிரச்சினைகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்துடன் இந்த நாடகம் மேடையேற்றப்படவுள்ளது.

நேற்று 27ஆம் திகதி காலை 9 மணிக்கு திருகோணமலை உவர்மலை விவேகானந்தா வித்தியாலயத்திலும் 11:30 மணிக்கு அனுராதபுர சந்தி விபுலானந்தா வித்தியாலயத்திலும், இன்று காலை 9 மணிக்கு நிலாவெளி கைலேஷ்வரா வித்தியாலயத்திலும், காலை 11:30 மணிக்கு சல்லி அம்பாள் மகாவித்தியாலயத்திலும் நடைபெற உள்ளன.

மார்ச் மாதம் முதலாம் திகதி காலை ஒன்பது மணிக்கு கிண்ணியா நடுத்தீவு சமூக சேவை நிலையத்திலும், 11.30 மணிக்கு கிண்ணியா அல் அதான் வித்தியாலயத்திலும் இரண்டாம் திகதி காலை 9 மணிக்கு மூதூர் பாட்டாளிபுரம் சமூக சேவை நிலையத்திலும், 11.30 மணிக்கு மூதூர் பிரதேச செயலக கலாசார மண்டபத்திலும், மூன்றாம் திகதி காலை 9 மணிக்கு முள்ளிப்பொத்தானை முஸ்லிம் மத்திய கல்லூரியிலும் காலை 11:30 மணிக்கு தம்பலகாமம் ஆதி கோனேஸ்வரா மகா வித்தியாலயத்திலும் இந்த கருத்தாடலுன் கூடிய நாடகம் முன்னெடுக்கப்பட இருக்கின்றது.

## சட்டவிரோத சிகரெடை விற்ற நபருக்கு ரூ. 1 லட்சம் தண்டம்

(காரைதீவு சகா)

சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட 604 றொப் மௌன்டன் (Top Mountain) ரக சிகரெட் பெட்டிகளை வைத்திருந்தவருக்கு ஒரு லட்சத்து ரூபாய் தண்டப்பணம் விதித்தது அக்கரைப்பற்று நீதிவான் மன்றம்.

விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த இந்த சிகரெட்டுக்களையும் சந்தேகநபரை அக்கரைப்பற்று பொலிஸார் திங்கட்கிழமை நீதிமன்றில் முற்படுத்தினர். சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

அக்கரைப்பற்று மேலதிக நீதிவான் தெசிபா ரஜீவன், சிகரட்டை வைத்திருந்தமைக்காக ஒரு லட்ச ரூபாய் தண்டமும், விற்பனை செய்தமைக்காக 1500 ரூபாய் தண்டமும் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

## விவசாயக் கிணற்றினுள் வீழ்ந்த 4 யானைகள் பாதுகாப்பாக மீட்பு!



வவுனியாசெட்டிகுளம் சின்னசிப்பிகுளம் பகுதியில் விவசாய கிணற்றுக்குள் தவறி வீழ்ந்த யானைகள் பலரது முயற்சியால் பாதுகாப்பாக மீட்கப்பட்டன.

மேற்படி பகுதியில் அமைந்துள்ள விவசாய கிணற்றினுள் நேற்று (திங்கட்கிழமை) காலை நான்கு யானைகள் தவறி வீழ்ந்தமையை அவதானித்த கிராமவாசிகள் இது தொடர்பாக செட்டிகுளம் பிரதேசசபை மற்றும் வனயீவராசிகள் திணைக்களத்துக்கு தகவல் தெரிவித்திருந்தனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற வனஜீவராசிகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் செட்டிகுளம் பிரதேச சபைக்கு சொந்தமான யேசிபி இயந்திரத்தின் உதவியுடன் நான்கு யானைகளையும் மீட்டு பாதுகாப்பாக காட்டுக்குள் அனுப்பிவைத்தனர்.

## ருஹுணு பல்கலைக்கழக தொழில்நுட்பப் பீடம் மூடல்

ருஹுணு பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பப் பீடம் இன்று முதல் ஒரு வாரத்துக்கு மூடப்படுகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று ருஹுணு பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட மோதல் காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மோதலில் மாணவர் குழுவொன்றால் விடுதியின் துணைப் பொறுப்பாளர், அவரது மனைவி மற்றும் தாயார் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய, ருஹுணு பல்கலைக்கழக தொழில்நுட்பப் பீட மாணவர்களை இன்று பிற்பகல் 2 மணிக்குள் பல்கலைக்கழக வளாகத்தை விட்டு வெளியேறுமாறு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரால் உத்தரவிடப்பட்டது.

மேலும், ருஹுணு பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பப் பீடம் இன்று முதல் ஒருவாரத்துக்கு மூடப்படுகின்றது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மொரட்டுவ ஆடையகத்தில் தீப் பரவலால் பலத்த சேதம்!



மொரட்டுவை நகரில் உள்ள பரிசுப் பொருள்கள் மற்றும் ஆடை விற்பனை நிலையத்தில் நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை திடீரென தீ பரவியதால் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

தீ ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரையில் வெளியாகவில்லை என்பதுடன், வர்த்தக நிலையத்தில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த மின்கலங்களிலிருந்து தீ பரவியிருக்கலாம் என தீயணைப்பு பிரிவினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இரண்டு தீயணைப்பு வாகனங்கள் மூலம் தீ முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் உயிர் சேதம் எதுவும் ஏற்படவில்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## லேகியம் விற்ற முதியவர் கைது

லேகியம் எனும் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட வயோதிபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நிந்தவூர் பொலிஸார் சனிக்கிழமை முன்னெடுத்த தேடு தலின் போது இவர் கைது செய்யப்பட்டார். கைது செய் யப்பட்ட சந்தேகநபரிடம் இருந்து 50 லேகியங்கள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபரின் வயது 73.

காலைக்கதிர்
Kalaikkathir

## 62 பேரும் பிணையில் ....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே உள்ளிட்ட 62 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

ஹோமாகம பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்தை, திறக்குமாறு வலியுறுத்தி, அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினர் இவ்வாறு கல்வி அமைச்சுக்குச் சென்றிருந்தனர்.

இதையடுத்து, கைது செய்யப்பட்ட 62 பேரும் கடந்த 24ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதையடுத்து இன்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்தநிலையில், இன்று குறித்த நபர்களை கடுவலை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது அவர்களைப் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

## போதனா .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேதப்படுத்திவிட்டுத் தப்பிய கும்பலைச் சேர்ந்த ஒருவரைத் தாம் கைது செய்திருக்கின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஏழாலையைச் சேர்ந்த 45 வயது நபரே பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். ஏனையோரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலாளிகளில் ஒருவரின் தந்தை போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார் என்றும் நோயாளர் பார்வை நேரம் முடிந்த பின்னர் தந்தையை பார்வையிட அனுமதிக்கவில்லை என்ற காரணத்துக்காகவுமே அந்தக் கும்பலைச் சேர்ந்தவர்கள் இந்த வன்முறையில் ஈடுபட்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஞாயிற்றுக்கிழமை இரவு 9.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சவ அறை பக்கம் உள்ள நுழைவாயிலுக்கு அருகில் பட்டா வனத்தில் வந்த சிலா கதவால் ஏறி குதித்து மருத்துவமனையில் நுழைய முற்சித்தனா.

அவர்களைத் தடுக்க முயன்ற காவலாளியை வாளால் வெட்ட முயற்சித்தனர். அவர் சுதாகரித்துக்கொண்டதும் அங்கிருந்த பொருட்களை வாளால் வெட்டிச் சேதப்படுத்திவிட்டுத் தப்பிச் சென்றனர்.

## இலங்கைக் கடல் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியத் துணைத் தூதுவரிடம் வலியுறுத்தியுள்ளது யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர் சமாசங்களின் சம்மேளனம்.

சம்மேளன தலைவர் சிறிகந்தவேல் புனிதபிரகாஸ் திங்கட்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதுவரை நேரில் சந்தித்து இது தொடர்பில் பேசினார். சம்மேளனப் பிரதிநிதிகளும் உடனடிருந்தனர். சந்திப்புக் குறித்து செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது.

எமது மீனவர்கள் எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகள் தொடர்பில் துணைத்தூதரிடம் சுட்டிக்காட்டி அதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தி மனுவொன்றைக் கையளித்தோம்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் எமது கடல்வளம் அழிக்கப்பட்டு மீனவர்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றதாக நாம் தூதுவரிடம் சுட்டிக்காட்டியபோது அந்த விடயம் உண்மை என்பதை ஏற்றுக்கொள்வதாகவும் அதற்குரிய நடவடிக்கை எடுப்பதாகவும் எமக்கு வாக்குறுதி தந்திருக்கிறார்.

மேலும் மீனவர் விவகாரம் தொடர்பில் அண்மைய நாட்களில் பல்வேறு விடயங்கள் ஊடகங்களில் வெளிவந்திருக்கின்றன. குறிப்பாக இந்திய மீனவர்களை இங்கு தொழிலில் ஈடுபட அனுமதிப்பது தொடர்பில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் கருத்துக் கூறியிருக்கின்றார்.

அது தொடர்பிலும் நாம் தூதுவரிடம் பேசியபோது அது ஒரு முன்மொழிவு என்றும் அது சம்பந்தமாக உத்தியோகபூர்வமாக எந்த முடிவுகளும் எடுக்கப்படவில்லை என்றும் உத்தியோகபூர்வமற்ற கருத்து என்றும் தெரிவித்தார். அப்படி ஒரு நடைமுறை வருவதற்கான சாத்தியம் குறைவு என்றும் துணைத் தூதுவர் எங்களிடம் உறுதிபடத் தெரிவித்திருக்கிறார்.

இந்த நிலையில் எமது கடற்பரப்பிற்குள் இந்திய மீனவர்கள் அத்துமீறி வரக் கூடாது என்பதை நாங்கள் மீண்டும் மீண்டும் ஆணித்தரமாக தூதுவரிற்கு எடுத்துக் கூறியிருக்கிறோம்.

எங்களுடைய இந்தக் கோரிக்கையில் உண்மை இருப்பதாகவும் நியாயம் இருப்பதாகவும் ஏற்றுக் கொண்டுள்ள துணைத்தூதுவர் இந்த விவகாரத்தை இந்திய மத்திய அரசிற்கு சொல்லி தமிழ்நாட்டு அரசிற்கும் கூறி அதனைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் கூறியிருக்கின்றார் – என்றார்.

அதேநேரம் அத்துமீறி வருகின்ற படகுகளை தொடர்ந்தும் கைது செய்ய வேண்டுமென இலங்கை அரசிடமும் நாங்கள் கோரிக்கை விடுக்கின்றோம் எனவும் அவர் தெரிவித்தார். அத்துமீறல்களை தடுத்து நிறுத்துவதற்கு உடனடியாக உரிய நடவடிக்கு எடுக்க வேண்டுமென இலங்கை ஜனாதிபதியிடமும் மீன்பிடித்துறை அமைச்சரிடமும் வலியுறுத்துவதாகவும்

இந்திய மீனவர்களை எமது கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட அனுமதிப்பது தொடர்பாக எந்தவித உத்தியோகபூர்வ முடிவுகளும் எடுக்கப்படவில்லை என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தம்மிடம் கூறியுள்ளார் என்றும் புனித பிரகாஸ் மேலும் தெரிவித்தார்.

''அவ்வாறு ஒரு அனுமதியை கொடுத்தால் எமது மீனவர்கள் தெருவில் இறங்கி பிச்சை எடுக்க வேண்டிய நிலைமைதான் ஏற்படும். ஆகையினால் இதனை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. இந்தியப் படகுகளை எமது கடற்பரப்பிற்குள் அனுமதிக்க எந்தவொரு காலத்திலும் நாங்கள் இடங்கொடுக்கப் போவதுமில்லை” என்றும் அவர் தெரிவித்தார்.

## ரணிலால் ஒருபோதும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்துக் கட்சிக் கூட்டம். அவரால் அரசியல் தீர்வை வழங்கவே முடியாது. இது தமிழர்களுக்குத் தெரியும். அவர்கள் ஒருபோதும் ரணிலின் நாடகத்துக்கு ஏமாந்து ரணிலுக்கு வாக்களிக்கமாட்டார்கள்.

தெற்கில் ஒரு குழப்பத்தை – இனவாதத்தை ஏற்படுத்துவதற்கு ரணில் முற்பட்டார். அது நடக்கவில்லை.

சிங்கள மக்கள் இனி ஒருபோதும் இந்த மாதிரியான சில்லறை இனவாதத்துக்குள் சிக்கமாட்டார்கள். – என்றார்.

## டலஸ் அணி மீது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் சபை சந்தர்ப்பவாத அரசியலை நடத்து கின்றது.

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் குற்றம் சாட்டினார்.

கொழும்பில் திங்கட்கிழமை செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இவ்வாறு குற்றஞ்சாட்டினார்.

மஹிந்த ராஜபக்சவின் படத்தை வைத்து அரசியல் நடத்தி முன்னேறிய அவர்கள், இன்று நன்றி மறந்து செயற்படுகின்றனர் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் சாடினார்.

## தேர்தலுக்கு நிதி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி எதிர்வரும் மார்ச் 3 ஆம் திகதியன்று குறித்த மனு பரிசீலனைக்கு அழைக்கப்படவுள்ளது.

மனுவை எதிர்வரும் மார்ச் மாதம் 9ஆம் திகதிக்கு முன்னர் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுமாறு மனுதாரர் தரப்பு சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் ஜயசூரிய விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு நீதியரசர்கள் எஸ்.துரைராஜா, யசந்த கோதாகொட மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகிய மூவரடங்கிய உயர்நீதிமன்ற அமர்வு முன்னிலையில் இன்று காலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நிதி அமைச்சின் செயலாளர், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அடங்கிய குழுவினர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சம்பந்தப்பட்ட தீர்ப்பின் மூலம் பிரதிவாதிகள் பொதுமக்களின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளனர் என்று அறிவிக்கும் நீதிமன்ற உத்தரவு, மனுவின் மூலம் கோரப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாண மாநகர ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்வைக்கப்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு யாழ்ப்பாணம் மாநகர சபையில் பெரும்பான்மை இல்லாத நிலையில் இன்றைய வாக்கெடுப்பு முக்கியமானதாக இருக்கும்.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலின்போது யாழ். மாநகர சபையில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை ஆசனங்கள் கிடைக்கவில்லை. தொங்கு சபையே அமைந்தது. அதில் கூடுதலான ஆசனங்களைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஈபிடிபி போன்ற கட்சிகளின் மறைமுக இணக்கப்பாட்டுடன் ஆட்சியைப் பிடித்தது.

ஆனோல்ட் முதல்வராகப் பதவியேற்றார். ஆனால் அவரது நிர்வாகத்தின் மீது சொந்தக் கட்சியினரே குற்றச்சாட்டுக்களைச் சுமத்தும் நிலையே இருந்ததால் வரவு – செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டது. இரண்டு தடவை அவரது வரவு – செலவுத்திட்டம் தோற்கடிக்கப்பட்டதனால் அவர் பதவி விலகினார்.

அதன் பின்னர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினைச் சேர்ந்தவரான மணிவண்ணன் முன்னணியில் இருந்து பிரிந்து நின்று தனியாக முதல்வர் பதவிக்குப் போட்டியிட்டார். ஈபிடிபி போன்ற மற்றைய கட்சிகளின் ஆதரவுடன் அவர் வெற்றிபெற்றார். எனினும் அவரது ஆட்சியின் மீதும் நிலவிய குற்றச்சாட்டுக்கள் அதிருப்திகளைத் தொடர்ந்து அவரது வரவு செலவுத் திட்டமும் தோற்கடிக்கப்பட்டது.

தோற்கடிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை இரண்டாவது வாசிப்புக்கு விடாமலேயே அவர் பதவி விலகினார். அதனால் மீண்டும் பதவிக்கு வந்தார் ஆனோல்ட். ஆனால் அவரது வரவு – செலவுத் திட்டத்தை அனைத்து எதிர்க் கட்சிகளும் ஒன்றிணைந்து தோற்கடித்தன. இன்று அதன் இரண்டாவது வாசிப்பு இடம்பெறவுள்ளது.

எதிர்க் கட்சிகளின் ஆதரவு இன்றி இதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை.



நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.


பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 15 திங்கட்கிழமை 27.02.2023 கதிர் 362


## யாழ். போதனா வைத்தியசாலைக்குள் அத்துமீறி புகுந்த வாள்வெட்டு கும்பல்

### தடுத்த காவலாளியையும் வெட்ட முயன்றதால் பரபரப்பு

யாழ். போதனா வைத்தியசாலைக்குள் அத்துமீறி நுழைய முயன்ற வன்முறை கும்பலைத் தடுத்த காவலாளியை வாளால் வெட்ட முயன்ற அந்தக் கும்பல் அவர் சுதாகரித்துக்கொண்டதும் அங்கிருந்த கதிரை, தளபாடங்களை வெட்டிச் 2

## பொலிஸாரின் தாக்குதலைத் தொடர்ந்து

# நேற்றைய பேரணியில் படுகாயமடைந்தவர் இன்று உயிர்ச் சாவு

அரசுக்கு எதிராகக் கொழும்பில் நேற்று தேசிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட் டத்தித்தைத் தடுத்து நிறுத்தி அது மேற்கொண்டு முன்னேறாது பொலிஸார் நடத்திய கண்ணீர்ப் புகைக் குண்டு மற்றும் நீர்த் தாரைத் தாக்குதலால் படுகாயமடைந்த போராளி ஒருவர் இன்று உயிர்ச் சாவடைந்தார்.

இரத்தினபுரி மாவட்டத்தின் நிவித்திகல பிரதேச சபைக்கான, தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் நிமல் அமரசிங்க (வயது 61) இவ்வாறு உயிர்ச் சாவ டைந்தார்.

ஞாயிற்றுக்கிழமை பேரணியின்மீது பொலிஸார் கண்ணீர்ப்புகைக் குண்டு வீச்சு மற்றும் நீர்த்தாரைத் தாக்குதல் நடத்தினர். இதனால் போராட்டக்காரர்கள் சிதறி ஓடினர். இதன்போது பலத்த காயமடைந்த 28 பேர் கொழும்பு தேசிய 2

# மருத்துவக் கழிவுகள் தொடர்பில் மக்கள் அச்சமடையவேண்டாம்

### யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவிப்பு




யாழ் போதனா வைத்தியசாலை மருத்துவக் கழிவுகளை எரியூட்டுவதற்கு இடமில்லை என்ற சர்ச்சை ஏற்பட்டுள்ள நிலையில், இது தொடர்பாக பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லை என யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி இன்று தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் செய்தி யாளர்களைச் சந்தித்த அவர் தெரிவித்ததாவது: யாழ் போதனா வைத்தியசாலை யின் மருத்துவ கழிவுகள் பாது காப்பான முறையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் உள்ள எரியூட்டியில் எரிக்கப்பட்டு வந்தன. கொரோனா பெருந்தொற்றுக் கார ணமாகத் தொற்றாளர்கள் பாவிக்கும் அனைத்து உடைமைகளையும் எரிக்க வேண்டிய நிலை காணப் பட்டதால் தெல்லிப்பளை எரியூட்டி அளவுக் கதிகமாகவே பணியாற்றி விட்டது. அதனால் அந்த எரியூட்டி இயந் திரத்தில் ஏற்பட்ட திருத்த வேலை காரணமாக தொடந்து 2

## தேசிய மக்கள் சக்தியின் ஆர்ப்பாட்டம் மீதான தாக்குதல்:

# பொலிஸ்மா அதிபரிடமிருந்து உடன் அறிக்கை கோருகிறது மனித உரிமைகள் ஆணைக்குழு

கொழும்பில் தேசிய மக்கள் சக்தி ஞாயிற்றுக்கிழமை நடத்திய ஆர்ப்பாட்டத்தைத் தடுக்க பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கை தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு உத்தரவிட் டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அறிக்கை ஒன்றை விடுத்துள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, உயர் அழுத்த நீர்த்தாரை தாக்குதல் மற்றும் கண்ணீர்ப்புகைக் குண்டு வீச்சு மேற்கொள்ளப்பட்டமை தொடர்பில் பொலிஸ் மா அதிபரிடம் அறிக்கை கோரியுள்ளது.

எதிர்வரும் 24 மணித்தியாலங்களுக்குள் இந்த அறிக்கை தரப்படவேண்டும் என்று ஆணைக்குழு தெரிவித்துள் ளது.

கொம்பனித்தெரு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யூனியன் பிளேஸ் பகுதியில் இந்தப் பேரணி இடம்பெற்ற போது, அதனைத் தடுக்கும் வகையில் பொலிஸார் உயர் அழுத்த நீர்த்தாரை 2



# 13 குறித்து பட்டிமன்றங்கள் வேண்டாம் அதை முழுமையாக அமுல்படுத்துங்கள்

### ஈபிஆர்எல்எவ் தலைவர் வலியுறுத்து



இவ்வாறு ஈபிஆர்எல்எவ் தலைவர் சுரேஷ் க. பிரேமச்சந்திரன் தெரிவித்தார். இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:

அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் நெருக் கடிகள் தோன்றுகின்ற பொழுது 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவோம் என்று கூறுவதும் இதனை சிங்கள இனவாத சக்திகள் எதிர்ப்பதும் பின்னர் அதனைத் திசைதிருப்பும் நோக்கில் செயற்படுவதும் இலங்கையை மாறிமாறி ஆட்சி செய்பவர்களின் வழக்கமாகிவிட்டது.

தென்னிலங்கை அரசியல் சமூகமும் பௌத்த மத குருமார்களும் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை தீர்ந்தால் மாத்திரமே இந்த நாடு முன்னேற்றமடையும் என்பதை ஏற்க மறுத்து, தமது குறுகிய அரசியல் இலாபங் களுக்காக தொடர்ந்தும் தமிழர் விரோதப்போக்கைக் கடைப்பிடிப்பது இந்த நாட்டின் நெருக்கடிக்குத் தீர்வாகாது

ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் பேசியபொழுது, பதின் மூன்றாவது திருத்தத்தை நடைமுறை படுத்துவதற்கு அனைத்துக் கட்சிகளினதும் ஆதரவைக் கோரினார். 13ஐப்பற்றிப் பேசிவரும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்கள் 13ஆவது திருத்தத்திற்கு மேலே சென்று அதனை நடைமுறைப்படுத்துவதற்குத் தான் தயார் எனக் கூறினார். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அவர்களும் 13ஆவதில் உள்ளவற்றை நடைமுறைப்படுத்த தனது சம்மதத்தைத் தெரி வித்திருந்தார். ஜேவிபியினரும்கூட அதற்கு ஆதரவான கருத்தையே வெளியிட்டிருந்தனர்.

அதற்கு எதிராக, சிங்கள இனவாதிகளின் தூண் டுதலின் பேரில் பௌத்த பிக்குகளை உள்ளடக்கிய இனவாதக் குழுக்கள் சில 13ஆவது திருத்தத்தை நிறைவேற்றக்கூடாது என்று போராட்டம் நடத்தினர். அவர்களுக்கு ஆதரவாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் இனவாத சக்திகளான விமல் வீரவன்ச, உதயகம்மன்பில, சரத்வீரசேகர போன் றோரும் குரல்கொடுத்தனர்.

இது இவ்வாறிருக்க, முன்னர் இதற்கு ஆதரவு தெரிவித்த மகிந்த ராஜபக்ச அவர்கள் இப்பொழுது 13ஐ நிறைவேற்றத் தேவையில்லை என்று சிங்கள ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

சிங்கள வாக்கு வங்கியை நம்பியிருக்கக்கூடிய தரப் புகளும் தங்களது வாக்குவங்கிகளுக்குப் பங்கம் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக இதே நிலைப் பாட்டை எடுக்கின்றன. கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பாக 13ஐ நடைமுறைப்படுத்துவேன் என்று உத்தரவாதம் 2

# எதிர்ப்புக்களையடுத்து பதவி விலகிய மயந்த!



அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் பதவி யிலி ருந்து தான் விலகுகிறார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் நாடாளு மன்ற உறுப்பினர் மயந்த திஸா நாயக்க இன்று அறிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்த அறிவிப்பை விடுத்தார்.

இது தொடர்பில் சபாநாயகருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்படும் எனவும் அவர் கூறி னார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸவுடன் நடைபெற்ற சந்திப்பின் பின்னரே மயந்த இந்த முடிவை எடுத்தார். 2

# இப்போது நிலமை சரியில்லை 13 குறித்து பேசி குழப்பவேண்டாம்

### இப்படிச் சொல்கிறார் மகிந்த ராஜபக்ச



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத் தப்போவதாகத் தெரிவித்ததற்கு எதிராக தேரர்கள் வீதியில் இறங்கியுள்ளனர். இந்நிலையில், 13 ஐ ஆதரிக்கும் கருத்தை நான் தற்போது வெளியிட்டு நிலைமையை மோசமாக்க விரும் பவில்லை. தற்போதைய நிலையில் அது குறித்துப் பேசுவதை நிறுத்த வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச. கண்டியில் வெள்ளிக்கிழமை விகாரைகளில் வழிபாடுநடத்திய மகிந்த பின்னர் செய்தி யாளர்களிடம் பேசும்போது 13ஐ நடைமுறைப்படுத்தத் தேவை யில்லை என்பதுதான் தனது 2


# அதானியின் காற்றாலை திட்டத்தை மன்னாரிலிருந்து இடம்மாற்றுங்கள்

### சிவில் அமைப்புக்கள் போர்க் கொடி

இந்திய அதானி நிறுவனத்தின் காற்றாலையை மன்னாரில் அமைப்பதற்குப் பதிலாக வேறிடத்திற்கு மாற்றவேண்டும் என்று பொது அமைப்புக்கள் வலியுறுத்தியுள்ளன.

மன்னார் பொது அமைப்புக்கள் இணைந்து இன்று மன்னாரில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தன. செய்தியாளர் சந்திப்பில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது: 2

# மூளைக் காய்ச்சலால் 4 வயதுச் சிறுமி சாவு



யாழ்ப்பாணத்தில் மூளைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட 4 வயதுச் சிறுமி சிகிச்சை பய னின்றி உயிரிழந்தார். யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த சிறுமி நேற்று உயிரிழந்தார் என்று அறி விக்கப்பட்டது.

புத்தூர் கிழக்கு - ஊறணி பகுதியைச் சேர்ந்த அஜிந்தன் லக்ஸ்மிதா (வயது4) என்ற சிறுமியே இவ்வாறு 2

## யாழ். போதனா.....

### முதலாம் பக்கத்தொடர்ச்சி...

சேதப்படுத்திவிட்டுத் தப்பிச் சென்றது.

ஞாயிற்றுக்கிழமை இவு 9.30 மணி யளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது.

யாழ். போதனா வைத்தியசாலையின் மேற்குப் புற வாயிலின் மேலாக ஏறிக்குதித்து சிலர் வைத்திய சாலைக்குள் நுழைய முயன்றுள்ளனர். பட்டா ரக வாகத்தில் வந்தவர்களே இப்படி அத் துமீறி நுழைய முயன்றுள்ளனர்.

இதனை அவதானித்த அந்த வாயிலுக்கான காவலாளி அவர்களை தடுக்க முயன்றார். அப்போது காவலாளியை வாளால் வெட்ட அவர்கள் முயற்சித் துள்ளனர். தாம் வந்த பட்டா வாகனத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வாளை எடுத்து காவலாளியை வெட்ட முயற் சித்ததுள்ளனர். அவர் சுதாகர்த்துக்கொண்டுதிருப்பித்தாக்கமுயற்சிக்கவே அங்கிருந்த கதிரை உள்ளிட்ட தள பாடங்களை வெட்டிச் சேதப்படுத்திவிட்டு வன்முறைக் கும்பல் தப்பிச் சென்றுள்ளது.

## 13 குறித்து.....

### முதலாம் பக்கத்தொடர்ச்சி...

வழங்கிய ஜனாதிபதி இன்றுவரை அது தொடர்பில் ஒரு சிறுதுரும்பைத் தன்னும் நகர்த் தவில்லை. இது தொடர்பாக சர்வகட்சி கூட்டங்களை ஜனாதிபதி நடத்தியபொழுதிலும் இவற்றை நிறை வேற்று வதற்காக ஒரு கால அவகாசத்தை தமிழ்க் கட்சிகள் குறிப்பிட்டபொழுதும் அவை எதுவும் கவனத்தில் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தக்கூடாது எனவும் அவை ஒற்றையாட்சிக்கு உட்பட்டது எனவும் அதனை நடைமுறைப்படுத்தக் கோருபவர்கள் இந்தியாவின் முகவர்கள் எனவும் அடிவருடிகள் எனவும் பரப்புரை செய்யும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கையின் ஒற்றையாட்சியின் கீழ் இருக்கும் அரசியல் சாசனத்தை ஏற்றுக்கொண்டு, அந்த அரசியல் சாசனத்தைக் காப்போம் என உறுதிமொழி எடுத்துக்கொண்டு, நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் வேடிக்கையும் இங்கேதான் நிகழ்கிறது.

பதின்மூன்றாவது திருத்தம் என்பது ஜே.ஆர். ஜெயவர்த்தன ஜனாதிபதியாக இருந்த காலத்தில், ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் நாடாளுமன்றத்தில் அங்கீகரித்து நிறைவேற்றப்பட்டது அது மாத்திரமல்லாமல், இலங்கையின் உயர் நீதிமன்றத்தாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அரசமைப்பில் உள்ள இந்த விடயங்களை நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதி யாரிடமும் அங்கீகாரமோ அனுமதியோ பெற வேண்டிய தேவையில்லை.

1988ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை, இலங்கையில் மாகாணசபைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதற்கு உரித்தான அதிகாரங்களில் சில கொடுக்கப்பட்டிருப்பதும் சில கொடுக்கப்படாமலிருப்பதும் நிதர்சனமான உண்மையாகும். ஆகவே, நாங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் முழுமையாக நடைமுறைப்படுத்துமாறே கோருகின்றோம்.

இலங்கையின் அரசமைப்பில் உள்ள இந்த விடயங்களை சிங்கள தரப்பில் இருக்கக்கூடிய குறுகிய அரசியல் இலாபம் கொண்ட கட்சிகள் மறுதலிப்பதும் அதற்கு எதிராகப் போராடுவதும் புரிந்துகொள்ளக் கூடியதே. ஆனால் தமிழ்த் தரப்பில் இயங்குகின்ற அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் போன்றவர்கள் அதே சிங்கள இனவாதக் குழுக்கள்போல் அவற்றை ஏற்றுக்கொள்ள மறுப்பதும் அதனை நடைமுறைப் படுத்துவதற்கு எதிராகச் செயற்படுவதும் எந்த வகையில் தமிழ் மக்களுக்கு அனுகூலமாக இருக்கும் என்பதை அவர்கள் வெளிப்படுத்த வேண்டும்.

மேலும், இவர்கள் கூறுகின்ற சமஷ்டி அரசியல் சாசனத்திற்கான வழிமுறைகளையும் அவர்கள் வெளிப்படுத்தவேண்டும். சட்டத்தின்பால் கிடைத்தவற்றை ஏற்கமறுத்து, அதனை வேண்டாம் என்று தூக்கியெறியக்கூடிய தமிழ் தரப்பு "அரசியல் விற்பன்னர்களை" இப்பொழுதுதான் காணக்கூடியதாக இருக்கின்றது.

சமஷ்டி என்பது தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஒரு புதிய கோரிக்கை அல்ல. தந்தை செல்வா சமஷ்டி கட்சியைத்தான் ஆரம்பித்து அதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி என்று பெயரையும் வைத்தார். அதனால் இலங்கை அரசாங்கத்திற்கும் சிங்கள இனவாத சக்திகளுக்கும் சமஷ்டி என்ற சொல் வேப்பங்காயாகக் கசக்கிறது. இப்பொழுது இருக்கக்கூடியது ஒற்றையாட்சி முறையைக் கொண்ட அரசமைப்பே. இந்த நாட்டில் சமஷ்டி ஆட்சி முறையைக் கொண்டுவரவேண்டுமாக இருந்தால், சமஷ்டி முறைமையை அடிப்படையாகக் கொண்ட புதிய அரசியல் சாசனம் ஒன்று உருவாக்கப் பட வேண்டும். அவ்வாறான சமஷ்டி அரசியல் சாசனத்திற்கு தமிழர் தரப்பில் யாரும் எதிரானவர்கள் அல்லர். ஆகவே, ஒரு சமஷ்டி அரசியல் சாசனத்திற்காகப் போராடக்கூடியவர்கள் அதற்கான வழிமுறைகளை வகுத்து தமது போராட்டங்களை முன்னெடுத்துச் செல்லலாம். அதற்கு தமிழ் மக்களின் முழுமையான ஆதரவும் இருக்கின்றது.

அது ஒரு நீண்ட போராட்டமாக அமையப்போகிறது என்பதுதான் யதார்த்தமானது. இந்த நிலையில், ஒரு மாற்று ஏற்பாடு இல்லாமல், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் காரணமாக உருவாக்கப்பட்ட மாகாணசபைகளை நிராகரிப்பதும் அதனை அரசியல்சாசனத்திலிருந்து தூக்கியெறிய வேண்டும் என்று சொல்வதும் தமிழ் மக்களுக்குக் கிடைத்தவற்றையும் இல்லாமல் செய்யக்கூடிய அறிவீலித்தனமான செயலாகும்.

பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு இந்திய அரசு இலங்கை அரசுக்கு அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றது. அதுமாத்திரமல்லாமல், சர்வதேச ரீதியிலும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் ஊடாகவும் பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு இந்தியா கோரிக்கை விடுத்து வருகின்றது. இதுதான் இலங்கை தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு முழுமையான தீர்வு என்று இந்தியாவும் கூறியது கிடையாது.

இந்த நிலையில், பதின்மூன்றாவது திருத்தம் வேண்டுமா? வேண்டாமா? அதனை ஆதரிப்பதா எதிர்ப்பதா என்று பட்டிமன்றம் நடத்துவதை விடுத்து, தமிழ்மக்களின் இருப்பைப்பாதுகாத்துக்கொள்ளவும் நாட்டை முன்னோக்கி நகர்த்தவும் பதின்மூன்று முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டாலே சாத்தியமாகும் என்பதைப் புரிந்துகொண்டு செயற்படுவது நாட்டின் அனைத்து அரசியல் சமூகத்திற்கும் நல்லது.

## எதிர்ப்புக்களையடுத்து....

### முதலாம் பக்கத்தொடர்ச்சி...

அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் பதவிக்கு கலாநிதி ஹர்ஷ டி சில்வாவை நியமிக்க, ஐக்கிய மக்கள் சக்தி தீர்மா னித்திருந்தது. எனினும், அரச தரப்பின் ஆதரவுடன் அப்பதவிக்கு மயந்த திஸாநாயக்க தெரிவாகியிருந்தார். இதற்கு ஐக்கிய மக்கள் சக்தி உட்பட எதிரணிகள் எதிர்ப்பை வெளியிட்டிருந்தன. மயந்த திஸாநாயக்க பதவி விலக வேண்டும் எனவும் வலியுறுத்தின.

இதற்குத் தொடக்கத்தில் மறுப்புத்தெரிவித்திருந்தாலும், கட்சிக்குள் எதிர்ப்புக்கள் வலுத்ததால், பதவி விலகும் முடிவை அவர் எடுத்துள்ளார்.

## பொலிஸாரின் .......

### முதலாம் பக்கத்தொடர்ச்சி...

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

அவர்களில் அமரசிங்க படுகாய மடைந்திருந்தார். அவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். அவரது நிலை கவலைக்கிடமாக இருப்பதாக முன்னரே வைத்தியசாலை நிர்வாகத்தால் அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில் இன்று அவரது உயிர் வைத்தியசாலையிலேயே பிரிந்தது.

## மூளைக் காய்ச்சலால் .....

### முதலாம் பக்கத்தொடர்ச்சி...

உயிரிழந்தார்.

சிவராத்திரி தினத்தன்று திடீரென வாந்தி எடுத்து சுகயீனமடைந்த இவர், அச்சுவேலி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவிற்கு மாற்றப்பட்டிருந்தார்.

விசாரணைகளின் பின்னர்சிறுமியின் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

## மருத்துவக் கழிவுகள்.....

### முதலாம் பக்கத்தொடர்ச்சி...

தெல்லிப் பழையில் எரிப்பதில் இடர்பாடு ஏற் பட்டது.

இதனால் போதனா வைத்திய சாலைக்கு எனத் தனியான ஒரு எரியூட்டி இயந்திரத்தினை பெற்று வைத்தியசாலைக்கு அண்மையில் பொருத்திப் பாவிப்பதற்கான முன் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றோம். அது தொடர்பில் யாழ்ப்பாண மாநகர சபையுடன் கலந்துரையாடியிருந் தோம். கோம்பையன் பகுதியில் மக்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு எரியூட்டியை அமைக்கலாமா என்பது பற்றி ஆராய்ந்தோம்.

ஒரு வாரத்திற்கு முன்னர் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளரிடம் இருந்து அனுப்பப்பட்ட கடிதத்தில், கோம்பையன்மணல் பகுதியானது மருத்துவக் கழிவு எரியூட்டி அமைப்ப தற்குப் பொருத்தமான இடம் இல்லை எனவும் மாற்று இடம் ஒன்றினை தெரிவு செய்யுமாறும் அறிவுறுத்தப்பட்டிருந்தது. வடக்கு மாகாண ஆளு நருடன் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாட உள்ளோம்.

அதற்கிடையில் நிலைமையைக் கையாளும் வகையில் வைத்திய சாலையின் மருத்துவ கழிவுகள் தனியார் நிறுவனங்கள் மூலம் எரிப்பதற்குரிய நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது. எனவே மக்கள் அச்சப் படவேண்டியதில்லை - என்றார்.

## தேசிய மக்கள் சக்தியின்....

### முதலாம் பக்கத்தொடர்ச்சி...

தாக்குதல் மற்றும் கண்ணீர்ப்புகைக் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர்.

இந்தப் பகுதியில் எதிர்ப்புப் பேரணிகளை நடத்தத் தடை விதித்து நீதிமன்ற உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பதை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் தற்போது விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதுடன் குறித்த அறிக்கை கிடைக்கப்பெற்றதன் பின்னர் மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

## அதானியின்....

### முதலாம் பக்கத்தொடர்ச்சி...

மன்னார் மாவட்ட மீனவர்கள் பல்வேறு விதங்களில் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அபிவிருத்தி என்ற பெயரில் மன்னார் மண்ணையும், மன்னாரில் உள்ள வளத்தையும் சுரண்டுகிறார்கள்.

அரசின் திட்டங்கள் மக்களின் வாழ்வாதாரத்தையும், எதிர்காலத்தை அழிக்கும் வகையிலேயே இருக்கின்றது. காற்றாலை என்ற பெயரில் மன்னார் தீவில் பல அழிவுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

மன்னார் மீனவர்களின் வாழ்வாதாரத் தொழிலான மீன்பிடிக்கு இந்தக் காற்றாலைகளால் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. எனவே காற்றாலை திட்டத்தை வேறு இடத்திற்கு மாற்ற நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும்.

மன்னார் தீவு பகுதிக்குள் அல்லாமல் மக்கள் பயன்படுத்தாத பல இடங்களுக்கு அவற்றை மாற்றலாம். அப்படிப்பட்ட பல இடங்கள் அருகில் இருக்கின்றன.

நாங்கள் அபிவிருத்திக்குத் தடையானவர்கள் இல்லை. காற்றாலைகளுக்கும் எதிரானவர்கள் இல்லை. மக்களின் வாழ்வியல், உரிமை, தொழில் என்பவற்றைப் பாதிக்கும் வகையில் திட்டங்களை முன்னெடுக்காதீர்கள் என்றுதான் கேட்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த ஊடகச் சந்திப்பில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ, மன்னார் மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்திக்குமான நிலையத்தின் இணைப்பாளர் தயாளன், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் ஏ.பெனடிற் குரூஸ், மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்க சமாசத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் ஆகியோர் கலந்துகொண்டனர்.



# தேர்தலை பிற்போடுவதற்கான சதித்திட்டங்கள் நிறைவேற்றம்!

## வேலுகுமார் கூறுகிறார்



கடந்த காலங்களில் தேர்தலை பிற்போடுவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகள் தற்போதுவெற்றியடைந்துள்ளன. தேர்தல்ஆணைக்குழுவின் அதிகாரங்களை வலுவிலக்கச் செய்து, அதன் சுயாதீனத் தன்மை இல்லாமல் செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் தேர்தல்களை பிற்போடுவதற்காக சதிமுயற்சிகள் அனைத்தும் ஜனாதிபதியால் நிறைவேற்றப்பட்டுள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொடர்ச்சியாக தேர்தலை நடத்துமாறு எதிர்க்கட்சி உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் வலியுறுத்தி வந்தபோதிலும் அதனைப் பொருட்படுத்தாமல் தேர்தல் பிற்போடப்பட்டிருக்கிறது.

ஜனநாயக உரிமையான தேர்தலை உரிய காலத்தில் நடத்துமாறு மேற்கொண்ட போராட்டத்தை அரசாங்கம் எவ்வாறு கையாண்டது என்பது எங்களுக்குத் தெரியும். எதிர்க்கட்சியால் அண்மையில் கொழும்பில் மேற்கொண்ட போராட்டத்தின்போது பொலிஸாரை குண்டர்களை போல பயன்படுத்தினார்கள்.

இவ்வாறான அரசாங்கத்தின் கடுமையாக போக்குகள் சுயாதீனமாக செயற்படக்கூடிய தேசிய தேர்தல் ஆணைக்குழுவை தாக்குப்பிடிக்க முடியாத நிலைக்குள் தள்ளிவிட்டுள்ளது.

ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டும், நாட்டுக்கு தேர்தல் தேவை, மக்களின் வாக்குரிமை பாதுகாக்கப்பட வேண்டும்என்று ஜனாதிபதி கருதியிருப்பாரானால் தேர்தல் இடம்பெற்றிருக்கும். ஆனால், சகல அதிகாரங்களையும் தன் வசம் வைத்துக்கொண்டு ஆணைக்குழுவை வலுவிழக்கச் செய்து அவர்கள் மீது குற்றம் சுமத்தி, இன்று தேர்தலையே இல்லாமல் செய்திருக்கிறார் ஜனாதிபதி. - என்றார்.

# இரகசியமாக கொண்டுவந்த அதிசொகுசு வாகனம் மாயம்!

## பெருந்தொகையை வரியாக செலுத்திய அரசு

ஜனாதிபதி அலுவலக அதிகாரிகளின் பாவனைக்காக கொண்டு வரப்பட்டதாகக் கூறப்படும் டொயோட்டா ப்ரியஸ் ஹைபிரிட் அதிசொகுசு வாகனம் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை எனவும், இது தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வாகனம் 2013 ஆம் ஆண்டு இறக்குமதி செய்யப்பட்டதாக சுங்கப்பதிவேடுகள் உறுதிப்படுத்தியுள்ளதுடன், இதற்கான சுங்க வரியாக 18 லட்சம் ரூபாவை ஜனாதிபதி அலுவலகம் செலுத்தியுள்ளது.

எவ்வாறாயினும், இந்த வாகனம் தொடர்பான கோப்பு தற்போது ஜனாதிபதி அலுவலகத்தில் இல்லை எனவும், இந்த அதிசொகுசு வாகனம் தற்போது ஜனாதிபதி அலுவலக வாகன தளத்தில் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வாகனத்தை தற்போது யார் பயன்படுத்துகின்றார்கள், யாருக்காக இறக்குமதி செய்யப்பட்டது போன்ற தகவல்கள் இதுவரை தெரியவரவில்லை., இருப்பினும், இந்த அதிசொகுசு வாகனம் ஜனாதிபதி அலுவலகத்தின் தேவைக்கேற்ப கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் சுங்கத் துறை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, வாகனம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அலுவலகம் சட்டமா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் சண்டே ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

# ஆஸ்திரேலிய வெண்ணெய் பழம் இலங்கையில் பயிரிட தீர்மானம்!

## டொலர்களைத் திரட்ட புதிய யுத்தி

நாட்டிற்கு டொலர்களை சம்பாதிப்பதற்காக எச்.ஏ.எஸ்.எஸ் வகைகளை கொண்ட ஆஸ்திரேலிய வெண்ணெய் பழம் இலங்கையில் விவசாய கைத்தொழில் பயிராக விரிவுபடுத்தவுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

விவசாயத் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் இந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வெண்ணெய் பழத்திட்டத்தின் முதற்கட்டமாக பதுளை மாவட்டத்தில் 200 ஏக்கர் காணி தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்த இனத்தின் மரக்கன்றுகள் ஆஸ்திரேலியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு பண்டாரவளை பிரதேசத்தில் நடப்பட்டுள்ளது.

பழங்கள் மற்றும் வெண்ணெய் கூழ் ஆகியவற்றைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் ஆரோக்கியத்துக்கு உகந்த வெண்ணெய்க்கு சர்வதேச சந்தையில் அதிக தேவை உள்ளது என்று விவசாய அமைச்சு தெரிவித்தது.

இந்த விவசாயத்துறை நவீனமயமாக்கல் திட்டத்துக்கு பதுளை மாவட்டத்தில் விவசாயம் செய்யக்கூடிய சுமார் 1000 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளது. எச்.ஏ.எஸ்.எஸ். வெண்ணெய் மரங்களை வளர்ப்பதற்குத் தேவையான தொழில்நுட்பம் குறித்து அவர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்படுவதுடன் செடிகள் மற்றும் நிதியுதவியும் வழங்கப்படும் என அமைச்சு தெரிவித்தது. மூன்று வருடங்களில் இந்தப் பழத்தின் மூலம் வருமானம் ஈட்ட முடியும், ஒரு மரத்தில் இருந்து 200 கிலோ வெண்ணெய் பழம் கிடைக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# ஊடக அறிக்கைகளின் மூலமாக தேர்தலை ஒத்திவைக்கமுடியாது!

## சட்ட வல்லுநர்கள் சுட்டிக்காட்டு

'உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெறாது என ஊடக அறிவிப்பு ஊடாக மாத்திரம் அதனை ஒத்திவைக்க முடியாது' என்று சட்ட வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் இந்த நடவடிக்கை தவறானது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தேர்தல்கள் ஆணைக்குழு கடந்த வெள்ளிக்கிழமை கூடியது. வர்த்தமானியில் அறிவித்தவாறு மார்ச் 9 ஆம் திகதி உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த முடியாது என்றும் மார்ச் 3ஆம் திகதி புதிய திகதி தொடர்பில் ஆணைக்குழு அறிவிக்கும் என்று ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டது.

வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைப்பதென்றால், அனைத்து மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களையும் அழைத்துக் கூட்டம் நடத்தி அதன் பிரகாரம் வர்த்தமானியில் தேர்தல் ஒத்திவைப்பு தொடர்பான அறிவித்தலை வெளியிட வேண்டும் என்றும், அதுவே சட்டரீதியானது என்றும் சட்ட வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# அரச காணியைக் குத்தகைக்கு விட்ட மொட்டுக்கட்சி முக்கியஸ்தர் கைது!



அரசாங்க காணியொன்றை முறைகேடான வழியில் குத்தகைக்கு விட்ட மொட்டுக் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர்ஒருவர்கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளத்தில் வசித்து வந்த மொட்டுக்கட்சியின் ஆனமடுவை பிரதேச சபைஉறுப்பினர்ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள் ளார். மேற்படி பிரதேச சபை உறுப்பினர் தனது அதிகாரம் மற்றும் செல்வாக்கைப் பயன்படுத்தி, அரசாங்கத்துக்குச் சொந்தமான 200 ஏக்கர் காணியொன்றை வெளிநாட்டவர் ஒருவருக்கு முறை கேடான வழியில் குத்தகைக்கு விட்டுள்ளார். அதன் மூலம் அரசாங் கத்துக்கு 2 கோடியே 40 லட்சம் ரூபா நிதி இழப்பை ஏற்படுத்தினார் என அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் தொடர்புடைய இன்னும் சிலரை கைது செய்வதற்கான பொலிஸ் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளநிலையில், கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக கொழும்பில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விமானத்தில் டொலர்களை ராஜபக் ஷக்கள் கொண்டோடினோம் என்பது சுத்தப் பொய்

## இப்படிச் சொல்கிறார் நாமல்



ராஜபக் ஷக்கள் விமானத்தில் டொலர்களை நிரப்பி உகண்டாவிற்கு கடத்தினர்எனக்கூறப்படும்குற்றச்சாட்டு அப்பட்ட மான பொய் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

மேற்படி குற்றச்சாட்டை யாராவது நிரூ பித்து அந்தப் பணத்தை இலங்கைக்குக் கொண்டுவந்தால், அந்தப் பணத்தில் இலங் கையில் உள்ள அனைத்துக் கடன்களையும் அடைத்துவிடலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஐக்கிய மக்கள்சக்தி ஆகிய கட்சிகள் ராஜபக் ஷக்களால் கொள்ளையடிக்கப்பட்ட பணத்தை தாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்த வுடன் கொண்டு வருவோம் என கூறினார் கள். ஆனால் கடந்த நல்லாட்சி அரசாங்கம் ஆட்சியில் இருந்த போது அவ்வாறான தகவல்கள் எதனையும் கண்டுபிடிக்க முடிய வில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

உலகில் எங்கும் ராஜபக்ஷர்களுக்கு இதுபோன்ற கணக்குகள் இருப்பதாக இதுவரை எந்தத் தகவலும் கண்டுபிடிக்கப்படவில்லை என தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் கூறியிருக்கிறார் எனவும் அவர் கூறினார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# அடிப்படை அறத்தை இழக்கலாமா?

சமூகத்தின் மீதான அக்கறையும் பொறுப்புணர்வும் எமது அறங்களாக எமக்கு முந்தைய தலைமுறை வரைக்கும் இருந்து வந்தது. வீட்டுக்கு வந்தவர்களை சாப்பிட்டீர்களா என்று கேட்கும் மரபு பணக்காரர் முதல் ஏழைகள் வரை எல்லோரிடமும் இருந்தது. எது இருக்கிறதோ அதைப் பகிர்ந்துண்ணும் பழக்கம் எள்ளானாலும் ஏழாய் பகிரவேண்டும் என்கிற மரபிலிருந்து வந்தது. ஆனால் இப்போது நிலமை என்ன?

ஊர்காவற்றுறையில் இரு வயோதிபப் பெண்கள் பட்டினி காரணமாகத இந்த உலகில் இனி வாழவேண்டாம் என்று முடிவெடுத்திருக்கிறார்கள் என்பது எவ்வளவு பெரிய அவலம். தனி ஒருவனுக்கு உணவில்லையேல் இந்த ஜெகத்தினையே அழித்திடுவோம் என்ற பாரதியாரின் கோபமும் அறச்சீற்றமும்கூட வேண்டாம், குறைந்த பட்சம் அருகில் உள்ளவருக்கு உணவிருக்கிறதா இல்லையா என்கிற அக்கறையைக்கூட இழுந்துவிட்டதா இந்தச் சமூகம்.

அந்த இரு வயோதிபப் பெண்களும் தனித்து வாழ்ந்தவர்கள். அவர்களுக்கு வருமானத்திற்கான வழி இல்லை. அது குறித்து அவர்கள் அரச அதிகாரிகளின் உதவியை நாடியிருக்கிறார்கள் என்று தெரிகிறது. அத்தோடு அங்கிருக்கும் வைத்தியசாலையிலும் பொலிஸ் நிலையத்திலும் அவர்களின் நிலமை தெரிந்தே இருக்கின்றது. இத்தனை அரச அதிகாரிகளுக்குத் தெரிந்திருந்தும் இந்த உலகில் நாம் இனி வாழவேண்டாம் என்று அவர்கள் முடிவெடுக்கும் நிலைக்கு இந்தச் சமூகம் அவர்கள் மீது அக்கறை காட்டவில்லை என்பது எவ்வளவு பெரிய மனிதப் பேரவலம்.

அவர்களின் உறவினர்கள் பார்த்திருக்கவேண்டும், அவர்களின் உறவினர்களுக்குத் தெரியப்படுத்தினோம் அவர்கள் கவனிக்கவில்லை என்று அதிகாரிகள் பொறுப்பைத் தட்டிக்கழித்துவிட முடியாது. ஆதரவற்ற ஒவ்வொரு குடிமகனையும் பாதுகாக்கவேண்டிய கடப்பாடு இந்த அரசுக்கு இருக்கின்றது. அதைச் செயற்படுத்தவேண்டியவர்கள் அரச அதிகாரிகளே. வறுமையில் வாடுபவர்களைக் கண்டால் விரட்டுவதும் பணக்காரர்களைக் கண்டால் குழைவதும்தான் அரச நடைமுறை என்றால், அத்தகைய ஒரு அரசும் அதிகாரிகளும் தேவையே இல்லை.

அந்த இரு பெண்களும் தம்மைத் தாமே மாய்த்துக் கொண்டமை குறித்த அனுதாபமோ, அருசையோ இன்றி இத்தகைய பட்டினிச் சாவுகளைக் கடந்து செல்லும் தற்குறிகளாக நாம் மாறிவிட்டிருப்பது இந்தச் சமூகத்தை எங்கே கொண்டு சென்று நிறுத்தும்.

அரசியல்வாதிகளுக்கும் இது குறித்து எந்த அக்கறையும் இல்லை. பொருளாதார நெருக்கடியால் இவ்வாறு விளிம்புநிலை மக்கள் படும் துன்பங்கள் குறித்து அக்கறை இல்லை. அத்தகையவர்களுக்கு உதவுவதற்கான எண்ணமோ செயற்றிட்டமோ இல்லை. பகட்டுக்கும் படத்துக்குமாக சாப்பாட்டுப் பொதிகளைக் கொடுக்கும் புகழ்விரும்பிகள்கூட எட்டமுடியாத இடத்திலிருந்த அந்தப் பெண்களைப் போலவே வேறு பலரும் இன்னும் ஆங்காங்கே இருப்பார்கள். அவர்களின் கதி என்ன என்பது குறித்து யாருக்கும் அக்கறையில்லை. அவை எல்லாம் வெறும் தற்கொலைகள் என்கிற செய்திக்குள் அடக்கமாகிவிடும்.

தமிழ்ச் சமூகம் தன் அடிப்படை அறத்தை இப்படி இழந்துவிடலாமா?

# ஜனாதிபதி ரணில் சர்வதேசத்திற்கு இன்று ருவிற்றரில் விளக்கம் கொடுக்கும் அவலம்

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சாட்டை



தேர்தலை ஒத்தி வைத்து ஜனநாயக விரோதச்செயற்பாட்டில் ஈடுபடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அது குறித்து சர்வதேசத்துக்கு இன்று ருவிட்டரில் விளக்கம் கொடுக்கின்றார் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

தமிழ்தேசிய மக்கள் முன்னணின் தேர்தல் பரப்புரை முல்லைத்தீவு, முள்ளியவளை, வற்றாப்பளை பகுதியில் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது. அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்துக்கு வந்து ஜனநாயகத்தைக் கேள்விக்குறியாக்கும் நிலையில் தனது கருத்துக்களைப் பதிவு செய்துள்ளார்.

அந்தக் கருத்துக்கு பலத்த விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்ற நிலையில் சமூக வலைத்தளமான ருவிட்டரில் அவர் நீண்ட விளக்கத்தைக் கொடுத்துள்ளார்.

அதில் உள்ளூராட்சித் தேர்தலைத் தான் மறுப்பதற்கான காரணம் சட்டரீதியானது என்பதை விளங்கப்படுத்த முயற்சித்துள்ளார்.

தேர்தல் நடத்தமுடியாது என்பது, காசு ஒதுக்கப்படாமல் இருப்பது அனைத்தும் சட்டவிரோதம். ஒரு ஜனநாயக நாட்டில் தேர்தல் அரசியல்வாதிகளின் கையில் இருக்க முடியாது. ஒரு நம்பகத்தன்மையை கொண்டதாக தேர்தல் அமையவேண்டும் என்பதற்காகத்தான், தேர்தல் திணைக்களம் என்றும் தேர்தல் ஆணைக்குழு என்றும் சுயாதீன கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

அந்தக்கட்டமைப்பு தேர்தல் நடக்கவேண்டும் என்று முடிவெடுக்குமாக இருந்தால் ஆட்சியில் இருக்கக்கூடிய எவரும் வந்து அந்த முடிவைக் கேள்விக்குட்படுத்தாமல் தேவைப்படும் நிதியை ஒதுக்கியாகவேண்டும்.

அனைத்தினையும் கேள்விக்குட்படுத்தும் வகையில் ரணில் விக்ரமசிங்க நடந்துகொள்ளும் சூழ்நிலையில் இந்த விளக்கத்தை ஆங்கிலத்தில் கொடுத்துள்ளார்.

அது எங்கள் மக்களுக்கோ சிங்கள மக்களுக்கோ விளங்குவதற்காக அல்ல. அது சர்வதேசத்துக்கு. மார்ச் மாத ஐ.நா. மனித உரிமை பேரவையில் அமர்வுகள் தொடங்கி நடைபெறுகின்றன. நிச்சயமாக இலங்கை யு.பி.ஆர். சுழற்சி என்ற ஆய்வில் இலங்கை ஆய்வு செய்யப்பட்டு அதனது அறிக்கை ஐ.நா. மனித உரிமை பேரவையில் பேசப்படும்.

தங்கள் அணியைக் காப்பாற்றுவற்காக ஜனநாயகத்தையே கேள்விக்குட்படுத்தி தேர்தல் நடத்தாத வகையில் நிதியை முடக்கிய ரணிலுடைய ஜனநாயக விரோதச் செயற்பாடுகள் அம்பலமாகிக் கொண்டிருக்கும் நிலையில் ஏதோ ஒருவகையில் தன்னை சர்வதேசத்தின் முன்பாக நியாயப்படுத்துவதற்காக ஜனாதிபதி ருவிட்டர் ஊடாகத் தன்னுடைய விளக்கத்தைக் கொடுக்கின்றார்.

நாடாளுமன்றத்துக்கு வந்து பதில் சொல்ல முடியாமல் ஒரு ஜனாதிபதி பதவியின் பெறுமதியைக் காப்பாற்ற முடியாத நிலைக்கு அவர் நிலைமை காணப்படுகின்றது.

ரணில் விக்கிரமசிங்க இன்றுதான் இந்த அவதாரததை எடுத்தவர் அல்லர் என்பது உண்மை .இது தான் உண்மையான ரணில.; இவரின் பண்புகளைத் தமிழர்கள் நாங்கள் 2001 ஆம் ஆண்டு முதல் நன்கு அறிந்தோம். - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கோமாளிகளின் தலைவன் இந்த நாட்டின் ஜனாதிபதி

## சிறிதரன் எம்.பி. காட்டம்



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கதன்னுடைய அடி மனதில் இருக்கின்ற அந்த பயங்கரவாதத் தோற்றத்தை வெளிக்காட்டி மக்களின் உரிமைகளைத் தடுத்து வருகின்றமை மிக மோசமானது. நாடாளுமன்றத்தில் கோமாளிகளின் தலைவனாக அவர் தென்படுகின்றார் எனநாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் இன்று இடம்பெறுகின்ற நிழ்வுகளுக்கு இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கதான் முதன்மைக் காரணராக இருக்கின்றார்.

குறிப்பாக 94 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலை யாழ். மாவட்டத்துக்கானதை தீவகத்திற்குள் முடக்கி, அந்தத் தேர்தலில் மற்றவர்களை வாக்களிக்க விடாத பங்கும் அவை சார்ந்தது.

அதற்கு பிற்பாடு வந்த சந்திரிக்கா, வவுனியாவில் கொத்தனி வாக்குகள் மூலம் அந்தத் தேர்தலை நடத்தியிருந்தார். ஆனால், தன்னை ஒரு ஜனநாயகவாதியாக இந்த உலகம் முழுவதும் காட்டிக் கொண்டிருக்கின்ற இன்றைய நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சர்வாதிகாரியாகச்செயற்படுவதை நாங்கள் இன்று அவதானிக்கின்றோம்.

மிக முக்கியமாக நாடாளுமன்றத்தில் ஒரு கோமாளிகளின் தலைவனாகவும், வெளியிலே ஜனநாயக சர்வாதியாகவும் தன்னுடைய அராஜகத்தை வெளிப்படையாக வெளிப்படுத்தி வருவதை அவதானிக்க முடிகின்றது. காணவும்கூடியதாக இருக்கின்றது.

காரணம், மக்கள் விடுதலை முன்னணியால் முன்னெடுக்கப்படுகின்ற மக்கள் போராட்டங்களையும் மக்கள் எழுச்சி போராட்டங்களையும் நசுக்குவதற்காக இடைக்கால தடை உத்தரவுகளை பிறப்பிப்பதன் மூலமும், நீதிமன்ற தடை உத்தரவுகளை பிறப்பிப்பதன் மூலமும் நாட்டிலே பேசுகின்ற உரிமையையும், நாட்டிலே போராடுகின்ற உரிமையையும், ஒன்றுகூடுகின்ற உரிமையையும் இந்த நாட்டின் ஜனாதிபதி லிபரல் வாதியென்றெல்லாம் பேரெடுத்த அவர் தன்னுடைய அடி மனதில் இருக்கின்ற அந்த பயங்கரவாத தோற்றத்தை வெளிக்காட்டி அவற்றைத் தடுத்து வருவது மிக மோசமானது.- எனத் தெரிவித்தார்.

# 10 சிறுமிகளைத் தொடர்ந்து துன்புறுத்திய நபர் கைது!

## இறக்குவானை சிறுவர் இல்லத்தில் காட்டுமிராண்டி தனம்

இறக்குவானை சிறுவர் இல்லத்தில் பராமரிக்கப்பட்டுவரும் சிறுமிகள் 10 பேரை தொடர்ச்சியாக பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தி வந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சிறுவர் இல்லக் காப்பாளரின் கணவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குழந்தைகள் இல்ல காப்பாளர் இல்லாத நேரத்தில் அவரது கணவர் இவ்வாறு பாலியல் துன்புறுத்தல்களில் ஈடுபட்டார் எனப்பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளின்போது சந்தேகநபர் சிறுவர் இல்லத்தில் வைத்து பத்து சிறுமிகளை தொடர்ச்சியாக பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் எனத் தகவல் வெளியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# இத்தாலியப் படகு விபத்தில் அகதிகள் 33 பேர் உயிரிழப்பு

## 58 பேர் காயமடைந்த நிலையில் மீட்பு



அகதிகளை ஏற்றிச் சென்ற படகு இத்தாலியக் கடலில் கவிழ்ந்ததில் 33 பேர் உயிரிழந்தனர். அவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டன. 58 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். எனினும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கலாம் என்று அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர்.

இத்தாலியின் தெற்கு கடல் பகுதியில் ஞாயிற்றுக் கிழமை இந்த விபத்து நிகழ்ந்தது. விபத்துக்குள்ளான படகில் 100க்கும் மேற்பட்ட அகதிகள் இருந்தனர் என்று கூறப்படுகிறது. படகு நடுக்கடலில் கவிழ்ந்து உடைந்ததில், அதன் சிதறல்களும் உயிரிழந்தவர்களின் சடலங்களும் கடற்கரையில் ஒதுங்கின.

மீட்புப் படையினர் விரைந்து சென்று 58 பேரை உயிருடன் மீட்டனர். 33 சடலங்களும் மீட்கப்பட்டதாக இத்தாலிய அரசுத் தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

விபத்து நிகழ்ந்த குரோடோன் நகர மேயர் வின்சென்ஸோ வோஸ், இது ஒரு துயரமான சம்பவம் எனக் கூறியுள்ளார்.

விபத்தில் உயிரிழந்தவர்கள் எந்தந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்பது உடனடியாகத் தெரியவரவில்லை. எங்கிருந்து இந்தப் படகு புறப்பட்டது எங்கு செல்ல இருந்தது என்ற தகவலும் கிடைக்கவில்லை. ஆனால், பொதுவாக இத்தாலியின் தெற்கு கடல் பகுதிக்கு வரும் படகுகள் துருக்கி அல்லது எகிப்து கடல் பகுதியிலிருந்து புறப்படும்.

பாய்மரப் படகுகள் உள்பட இந்த வகை படகுகள், இத்தாலியின் தெற்கு கடல் பகுதியில் கடலோரக் காவல் படை அல்லது மீட்புப் படகுகளின் உதவியின்றி நீண்ட தொலைவு செல்லும்போது விபத்தில் சிக்கிக் கொள்கின்றன.

# அத்தியாவசியமான மருந்துகளுக்கு பாகிஸ்தானில் பெரும் தட்டுப்பாடு

பாகிஸ்தானில் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்துள்ள நிலையில், அந்த நாட்டின் மருத்துவக் கட்டமைப்பு கடும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது.

கொரோனா பெருந்தொற்றைத் தொடர்ந்து பாகிஸ்தானிலும் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்துள்ளது. அதன் அந்நிய செலாவணி கையிருப்பு குறைந்துள்ளது. மருந்து உட்பட அத்தியாவசியப் பொருட்களைக்கூட இறக்குமதி செய்ய முடியாத நிலையில் நாட்டின் பொருளாதாரம் உள்ளது.

பாகிஸ்தான் அதன் மருந்து தயாரிப்புக்கான மூலப்பொருட்களில் 95 சதவீதத்தை இந்தியா, சீனா உட்பட வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறது. தற்போதைய பொருளாதார நெருக்கடியால் மருந்துப்பொருட்களை இறக்குமதி செய்வது தடைபட்டுள்ளது. ஏற்கெனவே கொள்முதல் கட்டறை வழங்கப்பட்ட மருந்துகள் கராச்சி துறைமுகத்துக்கு வந்துள்ளன. ஆனால், அவற்றுக்கான பணத்தை வழங்க போதிய கையிருப்பு இல்லை.

இதன் காரணமாக உள்நாட்டு மருந்து தயாரிப்பாளர்கள் தங்கள் தயாரிப்பைக் குறைத்து வருகின்றனர். இதனால் மருந்துகளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அறுவைச் சிகிச்சைகளுக்குத் தேவையான மயக்க மருந்து கையிருப்பு 2 வாரங்களுக்கு மட்டுமே உள்ளது. இதனால், மருத்துவர்கள் அறுவை சிகிச்சைகளை செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந்தச்சூழலில் மருத்துவத் துறையில்வேலையிழப்பும் அதிகரித்துள்ளது.

நாட்டின் நிதி நிலைமையை சரிசெய்ய பாகிஸ்தான் அரசு பன்னாட்டுச் செலாவணி நிதியத்திடம் (ஐஎம்எஃப்) உதவிகோரி உள்ளது. ஆனால், ஐஎம்எஃப் தீவிர நிபந்தனைகளை விதித்துள்ளது. இந்த நிபந்தனைகளுக்கு பாகிஸ்தான் உடன்படும் பட்சத்தில் ஐஎம்எஃப் கடன் 6.5 பில்லியன் டொலர் வழங்குவதாகத் தெரிவித்துள்ளது. வட்டி விகிதத்தை அதிகரிக்க வேண்டும் என்பதை ஒரு நிபந்தனையாக ஐஎம்எஃப் முன்வைத்துள்ள நிலையில், பாகிஸ்தான் கடனுக்கான வட்டி விகிதத்தை 200 புள்ளிகள் உயர்த்த முடிவு செய்துள்ளது. தற்போது பாகிஸ்தானில் வட்டி விகிதம் 17% ஆக உள்ளது. இது 19% ஆக உயர்த்தப்பட உள்ளது.

# அமெரிக்காவை வெறுக்கும் நாடுகளுக்கு நிதி உதவியை நிறுத்துவேன் - ஹேலி தெரிவிப்பு

"அமெரிக்க அதிபராக தான் தேர்ந்தெடுக்கப்பட்டால், அமெரிக்காவை வெறுக்கும் நாடுகளுக்கு நிதியுதவியை நிறுத்திவிடுவேன்" என இந்திய-அமெரிக்கரான நிக்கி ஹேலி தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான், சீனா, ஈராக் உள்ளிட்ட நாடுகளைக் குறிப்பிட்டு அவர் இவ்வாறு கூறினார்.

அமெரிக்காவின் அடுத்த அதிபர் தேர்தல் 2024ஆம் ஆண்டு நவ. 25-ஆம் திகதி நடைபெறுகிறது. இதில் போட்டியிடப்போவதாக குடியரசுக் கட்சியைச் சேர்ந்த நிக்கி ஹேலி ஏற்கெனவே தெரிவித்துள்ளார். அதற்கு அவர் குடியரசுக் கட்சிக்குள் உள்ள முன்னாள் அதிபர் ட்ரம்பை முதலில் தோற்கடிக்கவேண்டும். 51வயதாகும் ஹேலி, தெற்கு கரோலினா மாகாண ஆளுநராக இருமுறை பதவி வகித்தவர்.

நியூயார்க் போஸ்ட் நாளிதழில் நிக்கி ஹேலி எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டிருப்பதாவது: நான் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் அமெரிக்காவை வெறுக்கும் நாடுகளுக்கான நிதியுதவியை நிறுத்துவேன். வலிமையான அமெரிக்கா, மோசமான நாடுகளுக்கு நிதியுதவி அளிக்க வேண்டியதில்லை.

அமெரிக்கா கடந்த ஆண்டு 46 பில்லியன் டொலர் வெளிநாட்டு நிதியுதவியை சீனா, பாகிஸ்தான், ஈராக் போன்ற நாடுகளுக்கு வழங்கியுள்ளது. அமெரிக்காவை சேர்ந்த வரி செலுத்துவோர் தங்கள் பணம் எங்கு செல்விடப்படுகின்றது என்பதைத் தெரிந்துகொள்ள உரிமை கொண்டவர்கள். அமெரிக்க எதிர்ப்பு நாடுகளுக்கு அந்தப் பணம் செல்கிறது எனத் தெரியவந்தால் அவர்கள் அதிர்ச்சி அடைவார்கள்.

ஐ.நாவுக்கான அமெரிக்க தூதராக நான் இருந்தபோது, பாகிஸ்தானுக்கு படைத்துறை நிதியுதவியை நிறுத்தும் அப்போதைய அதிபர் டொனால்ட் டிரம்பின் முடிவுக்கு ஆதரவு அளித்தேன். ஏனெனில், அமெரிக்கப் படையினரைக் கொல்லும் பயங்கரவாதிகளுக்கு ஆதரவளிக்கும் நாடு பாகிஸ்தான். அந்த முடிவு நமது வீரர்களுக்கும், நமது நாட்டைச் சேர்ந்த வரி செலுத்துவோருக்கும், நமது நலன்களுக்கும் பெரிய வெற்றியாகும். ஆனால், இப்போது பாகிஸ்தானுக்கு ராணுவ நிதியுதவியை அதிபர் பைடன் நிர்வாகம் மீண்டும் வழங்கத் தொடங்கியுள்ளது.

அதேபோல ஊழல் நிறைந்த ஐ.நா. அமைப்புக்கும் நிதியுதவியை பைடன் நிர்வாகம் மீண்டும் வழங்கத் தொடங்கியுள்ளது. அந்த நிதி பாலஸ்தீன மக்களுக்கு உதவவேண்டும்; ஆனால், நமது கூட்டாளி இஸ்ரேலுக்கு எதிரான பரப்புரைக்குத்தான் உதவுகிறது.

அமெரிக்கர்களுக்கு சீனாவால் வெளிப்படையான அச்சுறுத்தல் இருந்தபோதும், அபத்தமான சுற்றுச்சூழல் திட்டங்களுக்காக கம்யூனிஸ்ட் சீனாவுக்கு அமெரிக்கர்களின் வரிப் பணம் இப்போதும் வழங்கப்படுகிறது.

ஈராக்கின் தற்போதைய அரசு ஈரானுக்கு நெருக்கமாக இருக்கும்போதிலும், ஈராக்குக்கு கடந்த சில ஆண்டுகளில் ஒரு பில்லியன் டொலருக்கும் அதிகமாக அமெரிக்கா நிதி அளித்துள்ளது.

ரஷ்ய சர்வாதிகாரி விளாடிமீர் புடினின் நெருங்கிய கூட்டாளியான பெலாரஸுக்கும், பயங்கரவாதத்துக்கு ஆதரவளிக்கும் நாடு என அமெரிக்கா வரையறை செய்துள்ள கம்யூனிஸ்ட் கியூபாவுக்கும் நாம் பணம் வழங்கி வருகிறோம். இது அமெரிக்காவின் குடியரசு, ஜனநாயக கட்சி என இரு கட்சிகளையும் சேர்ந்த அதிபர்களின் ஆட்சியில் பல ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது.

நமது நாட்டின் வலிமையையும், பெருமையையும், நமது மக்களின் நம்பிக்கையையும் மீட்டெடுப்பதற்காக அதிபர் தேர்தலில் போட்டியிடுகிறேன். அமெரிக்க கூட்டாளிகள், இஸ்ரேல், உக்ரைன் போன்ற நமது நண்பர்களுக்கு உதவுவதுதான் புத்திசாலித்தனமே தவிர, நமது எதிரிகளுக்கு நமது மக்களின் வரிப் பணத்தை அளிப்பது உசிதமானது அல்ல என்று தனது கட்டுரையில் நிக்கி ஹேலி தெரிவித்துள்ளார். நிக்கி ஹேலி, அதிபர் தேர்தலில் அதிகாரபூர்வ வேட்பாளராக அறிவிக்கப்படுவதற்கு முன் குடியரசுக் கட்சி சார்பில் அதிபர் வேட்பாளராகத் தேர்ந் தெடுக்கப்பட வேண்டும். குடியரசுக் கட்சி சார்பில் முன்னாள் அதிபர் டிரம்பும் அதிபர் தேர்தலில் போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு 4 பேர் உயிரிழப்பு; 14 பேர் காயம்

பாகிஸ்தானின் பலூசிஸ்தான் மாகாணத்தில் ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட குண்டுவெடிப்பில் 4 பேர் உயிரிழந்தனர். 14 பேர் காயமடைந்தனர்.

இது குறித்து பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்ததாவது:



பலூசிஸ்தான் மாகாணம், பர்கான் நகரில் உள்ள ஒரு சந்தையில் மோட்டார் சைக்கிளில் வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு வெடித்தது. இதில் 4 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 14 பேர் காயமடைந்தனர். காவல்துறையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று விசாரணையில் ஈடுபட்டனர் என்றார்.

இந்தச் சம்பவத்துக்கு எந்தப் பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. இத்தாக்குதலுக்கு பிரதமர் ஷாபாஸ் ஷெரீஃப், பலூசிஸ்தான் முதல்வர் மிர் அப்துல் பிஸென்ஜோ ஆகியோர் கண்டனம் தெரிவித்தனர்.

பாகிஸ்தானில் தடை செய்யப்பட்ட தெஹ்ரீக்-ஏ-தலிபான் பாகிஸ்தான் (டிடிபி) அமைப்புடன் அரசு நடத்திவந்த பேச்சுகடந்த ஆண்டு நவம்பரில் முறிந்தது. அதுமுதல் அந்த அமைப்பு பலூசிஸ்தானில் தொடர் தாக்குதலை நடத்தி வருகிறது.

# இந்தியாவின் சர்தேச முக்கியத்துவம் வருங்காலத்தில் மேலும் அதிகரிக்கும்

## அமெரிக்க இணைச் செயலர் கருத்து

இந்தியாவின் வளர்ச்சியும் அதன் சர்வதேச முக்கியத்துவமும் வருங்காலத்தில் மேலும் அதிகரிக்கும் என்று அமெரிக்க அயலுயுறவு இணை அமைச்சர் நான்சி இசோ ஜாக்சன் தெரிவித்தார்.

சிலிகான் பள்ளத்தாக்கிற்கு கடந்த வாரம் வந்த தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்க வெளியுறவு இணைச் செயலர் நான்சி இசோ ஜாக்சன், அங்குள்ள சமுதாய தலைவர்களிடமும், ஊடகங்களிடமும் பேசினார்.

அப்போது அவர் தெரிவித்ததாவது: ஜி20 நாடுகளின் தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்றுள்ளது. சர்வதேச அரங்கில் அதன் முக்கியத்துவம் மேலும் வளரும். அதேபோல், இந்திய-அமெரிக்க உறவும் வளரும்.

இந்தியாவில் இருந்து அமெரிக்கா வருபவர்களுக்கான விசா காத்திருப்புக் காலத்தை குறைப்பதற்கான நடவடிக்கைகளை அமெரிக்க அயலுறவுத் துறை மேற்கொண்டு வருகிறது - என்றார். முன்னதாக, தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்க வெளியுறவுத்துறை வெளியிட்ட ட்விட்டர் பதிவில், "புதிய கண்டுபிடிப்புகள் மூலமும், அதிகரித்து வரும் வாய்ப்புகள் மூலமும் இந்தியாவும் அமெரிக்காவும் பயன்களைப்பெற்று வருகின்றன. அமெரிக்காவில்உள்ள இந்தியக் கண்டுபிடிப்பாளர்கள், கல்வியாளர்கள், மருத்துவர்கள், தொழிலதிபர்கள், சமூகத் தலைவர்கள் ஆகியோரின் எதிர்பார்ப்புகள் குறித்து நாங்கள் கேட்டு வருகிறோம்" எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# துருக்கியில் நிலநடுக்கத்தினால் ஒன்றரை லட்சம் வீடுகள் நாசம்



துருக்கியில் ஏற்பட்ட பெரும் நிலநடுக்கத்தினால் அங்குகு ஒரு லட்சத்து 60 ஆயிரம் அடுக்கு மாடிக் கட்டடங்கள் இடிந்து நொருங்கியுள்ளன. இந்தக் கட்டங்களில் 5 லட்சத்துக்கும் மேற்பட்ட வீடுகள் இருந்துள்ளன. அதில் ஏராளமானோர் வசிதிதனர். அவர்களில் 44 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர்.

துருக்கியில் பெப்ரவரி 6ஆம் திகதி 7.8 ரிச்டர் அளவில் பயங்கர பூகம்பம் ஏற்பட்டது. அதன் தாக்கம் சிரியாவிலும் நிகழ்ந்தது.

இந்நிலையில், துருக்கியில் மட்டும் பல்வேறு பகுதிகளில் ஒருலட்சத்து 60 ஆயிரம் அடுக்குமாடி கட்டிடங்கள் தரைமட்டமாயின. அவற்றில் 5 லட்சத்துக்கும் மேற்பட்ட வீடுகளில் மக்கள் வசித்தனர். அவர்களில் ஏராளமானோர் வீடுகளை இழந்து முகாம்களில் தவித்து வருகின்றனர்.

இந்நிலையில், துருக்கியில் வீடுகளை இழந்தவர்களுக்காக புதிதாக வீடுகள் கட்டும் பணிதொடங் கப்பட்டுள்ளதுஎன்றுதுருக்கிபேரிடர் மற்றும் அவசரகால நிர்வாக ஆணையம் தெரி வித்தது.

அதற்கேற்ப பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அதற்கான கேள்வி கோரல்கள், ஒப்பந்ததாரர்களை தேர்வு செய்யும் பணிகள் நடைபெற்றுள்ளன என்று அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதிபர் தேர்தல்: துருக்கியில் அதிபர் தேர்தல்நடைபெற உள்ளது. இதனால் ஓராண்டுக்குள் புதிதாக வீடுகளை கட்டி முடிக்க அதிபர் எர்டோகன் உறுதி அளித்துள்ளார். எனினும், வீடுகள் கட்டும்போது நிலநடுக்கங்களைத் தாங்கக்கூடிய வகையில் அவை அமைக்கப்படவேண்டும் என்று நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

# இ.எஃப்.எல் கால்பந்தாட்டக் கிண்ணம் மன்செஸ்டர் யுனைடெட் சம்பியன்!



ஆங்கில கால்பந்தாட்டக் கிண்ணத் (இ.எப்.எல்) தொடரில், மன்செஸ்டர் யுனைடெட் அணி ஆறாவது முறையாக சம்பியன் கிண் ணத்தை வென்றுள்ளது.

வெம்ப்ளி விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில், மன்செஸ்டர் யுனைடெட் அணியும் நியூகாஸ்ட்ல் அணியும் ஒன்றையொன்று எதிர்கொண்டிருந்தன. அந்தப்போட்டியில், மன்செஸ்டர் யுனைடெட் அணி 2-0 என்ற கோல்கள் எண்ணிக்கையில் வெற்றி பெற்றது.

இதில் மன்செஸ்டர் யுனைடெட் அணி சார்பில், காஸ்மிரோ 33ஆவது நிமிடத்தில் ஒரு கோலும், மார்கஸ் ரஷ்போர்ட் 39ஆவது நிமிடத்தில் ஒரு கோலையும் அடித்து தமது அணியை வெற்றிபெற வைத்தனர்.

# தெ. ஆபிரிக்க கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் குழாமில் மாற்றங்கள்



மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக நடைபெறவுள்ள டெஸ்ட் தொடருக்கான தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட ஆலோசகராக அந்த அணியின் முன்னாள் வீரர் நீல் மக்கன்சி நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் புதிய தலைமைப் பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்ட சுக்ரி கொன்ரட்டுடன் இணைந்து இவர் துடுப்பாட்ட ஆலோசகராகச் செயற்படவுள்ளார். அந்த அணியின் துடுப்பாட்டப் பயிற்சியாளராக இதுவரை இருந்த இலங்கையணியின் முன்னாள் வீரர் திலான் சமரவீரவின் பணிக்காலம் நிறைவுபெற்றதையடுத்து இந்தத் தொடருக்கான ஆலோசகராக நீல் மக்கன்சி செயற்படுவாரென அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு வந்துள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளது. தலைமைப் பயிற்றுவிப்பாளராக தன்னுடைய முதல் தொடரை சுக்ரி கொன்ரட் ஆரம்பிக்கவுள்ளார். அதே நேரம், இதுவரை காலமும் பந்துவீச்சுப் பயிற்றுவிப்பாளராக செயற்பட்டுவந்த சார்ல் லங்கவெல்ட், மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடருடன் தனது பதவியிலிருந்து விலகவுள்ளார். ஐ.பி.எல். அணியொன்றின் பயிற்றுவிப்புப் பதவியை இவர் பெறவுள்ளதாகவும் தகவல்கள் வெளி யாகியுள்ளன.

பந்துவீச்சுப் பயிற்சியாளர் பதவியிலிருந்து சார்ல் லங்கவெல்ட் விலகிய பின்னர், ஏற்கனவே பெயரிடப்பட்டுள்ள பீட் போதா அந்த இடத்திற்கு இணைந்து கொள்ளவுள்ளார். தென்னாபிரிக்க டெஸ்ட் அணியின் தலைவர் பொறுப்பிலும் அண்மையில் மாற்றம் மேற்கொள்ளப்பட்டு, டெம்பா பவுமா புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டெஸ்டில் அதிகளவு ஓட்டங்கள் வில்லியம்சன் நியூஸி. சாதனை



டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்களை எடுத்த நியூசிலாந்து வீரர் என்கிற சாதனையைப் படைத்துள்ளார் கேன் வில்லியம்சன்.



இங்கிலாந்துக்கு எதிரான 2ஆவது டெஸ்டில் சதமடித்துள்ளார் வில்லியம்சன். இதையடுத்து 7787 ஓட்டகளுடன் டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்கள் எடுத்த நியூசிலாந்து வீரர் என்கிற சாதனையைப் படைத்துள்ளார்.

இதற்கு முன்பு 7683 ஓட்டங்களுடன் முதலிடத்தில் இருந்தார் ராஸ் டெய்லர். அவரை விடவும் 35 இன்னிங்ஸ் குறைவாக விளையாடியுள்ளார் வில்லியம்சன். மேலும் டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக சராசரி ஓட்டங்கள் (53.33) வைத்துள்ள நியூசிலாந்து வீரரும் வில்லியம்சன்தான்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் 26 சதங்கள் அடித்துள்ளார் வில்லியம்சன். 20க்கும் அதிகமான டெஸ்ட் சதங்கள் அடித்துள்ள ஒரே நியூசிலாந்து வீரர் என்கிற பெருமையையும்

## பெண்கள் ரி-20 உலகக்கிண்ணத் தொடர்

# ஆறாவது முறையாகவும் ஆஸ்திரேலியா சம்பியன்

பெண்களுக்கான ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் ஆறாவது முறையாக ஆஸ்திரேலிய அணி சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.

கேப் டவுனில் நேற்று நடைபெற்ற தொடரின் இறுதிப்போட்டியில்,



நடப்பு சம்பியனாகவிருந்த ஆஸ்திரேலிய அணியும், முதல் முறையாக ஐ.சி.சி. தொடரொன்றின் இறுதிப்போட்டிக்கு தெரிவான தென்னாபிரிக்க அணியும் ஒன்றையொன்று எதிர்கொண்டிருந்தன.

இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்துக் களமிறங்கி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 156 ஓட்டங்களைப்




பெற்றது. பெத் மூனே ஆட்டமிழக்காது 74 ஓட்டங்களையும் அஸ்லெ கார்ட்னர் 29 ஓட்டங்களையும் எடுத்தனர். தென்னாபிரிக்க அணியின் இஸ்மயில் மற்றும் காப் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

அதனைத்தொடர்ந்து 157 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய தென்னாபிரிக்க அணியால் 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகளை இழந்த நிலையில் 137 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. ஆஸ்ரேலிய அணி 19 ஓட்டங்களால் இறுதிப் போட்டியில் வெற்றியைத் தனதாக்கியது. அணியின் லாரா வோல்வார்ட் 61 ஓட்டங்களையும் ட்ரையோன் 25 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர்.

ஆஸ்திரேலிய அணியின் மேகன் ஸட், கார்ட்னர், டாஸி பிரவுன் மற்றும் ஜெஸ் ஜொனாசென் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டினைக் கைப்பற்றியிருந்தனர்.

இறுதிப்போட்டியின் ஆட்டநாயகியாக பெத் மூனேயும் தொடரின் நாயகியாக அஸ்லெ கார்ட்னரும் தெரிவுசெய்யப்பட்டனர்.



# துபாய் ஓபின் டென்னிஸ் தொடர் செக்கின் கிரெஜிகோவா சம்பியன்

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்ற துபாய் ஓபின் சர்வதேச டென்னிஸ் போட்டித் தொடரில் செக்குடியரசு வீராங்கனை கிரெஜிகோவா சம்பியன் பட்டத்தை வென்றிருக்கிறார்.

சனிக்கிழமை நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் இறுதிப்போட்டியில் உலகின் முதல் நிலை வீராங்கனையும் 3 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றவருமான போலந்தின் இகா ஸ்வியாடெக்குடன் தரவரிசையில் 30 ஆவது இடத்தில் உள்ள செக்குடியரசின் பார்பொரா கிரெஜ்சிகோவா

